# ஸ்ரீ குமர குருபரர்



டாக்டர் உ. வே. சாமிநாதையர்
449
15-7-83

ஆடி 1 (17—7—83)
தொகுதி 5 பகுதி 10

உ

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

கயிலைமாமுனிவர்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.

சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு. மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலை நகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T.,

காஞ்சிபுரம்

புலவர் திரு கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D.,

மதுரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்

அட்டையில் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
'கயிலைமாமுனிவர்'
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

உள்ளத்தில் உள்ள ஐம்புலன்கள் ஞானானுபவத்தைப் பெறுகின்றன. புறப்புலன்களால் பெறும் இன்பம் அழியக் கூடியவை. பெயரக்கூடியவை; திகட்டக் கூடியவை.

'அழியாத, திகட்டாத, பெயராத இந்த இன்பத்தைக் குருநாதன் தர யாம் பெற்றோம்' என்று ஸ்ரீ சுவாமிகள் அறிவித்தருள்கிறார்கள்:-

''அடங்கா ஐம்புலன் அடக்கினர்க்கு அம்ம
ஒடுங்கா ஐம்புலன் உளத்தினும் உளவே
அவைதாம்
செவிப்புலன் அறியா அகத்துஒலி ஒன்றே
மெய்ப்புலன் அறியாத் தட்பம்மற்று ஒன்றே
கண்புலன் அறியாக் கதிர்ஒளி ஒன்றே
நாச்சுவை அறியா நறுஞ்சுவை ஒன்றே
மூக்குஉயிர்த்து அறியா முருகுமற்று ஒன்றே

பேரா இன்பப் பெற்றியில் திளைக்கும்
ஆரா இன்பம்ஒன்று ஆர்ந்தனம் யாமே''

[அம்ம - வியப்பிடைச் சொல்; அவைதாம் - கூன்சொல்; அகம் - உள்; தட்பம் - குளிர்ச்சி; கதிர் - பெரிய; முருகு - மணம்; பேரா - பெயரா; பெற்றி - தன்மை; திளைக்கும் - துய்க்கும்; ஆரா - திகட்டாத; ஆர்ந்தனம் - அநுபவிக்கிறோம் (காலவழு அமைதி); மற்று (2) - அசைநிலைகள்.].

அடுத்துப் பரமாசாரியனின் திருத் தலமாகிய திருவாரூர்த் திருக்குளத்தைப்பற்றியதொரு வருணனை. அவ் வருணனையும் முன்னர்க் கூறிய செய்தியொடு ஒட்டிவருவது பொருத்தமாகும்.

படுகர் என்பது நீர்நிலை. இங்குக் குளத்தைக் குறிக்கிறது. குளத்தின் அலைகள் கரையை மோதுகின்றன. அம் மோதுதலினால் ஒலி எழும்புகிறது. அக்குளத்தில் எண்ணற்ற சங்குகள் பல முத்துக்களை ஈன்றன. அம் முத்துக்களின் ஒளி, நிலா ஒளியெனக் குளத்தின் மேற்பரப்பில் பரவி அழகு செய்தன.

அக்குளமே ஓர் அழகியநீர் மகள் எனக் கொள்வோம். தெளிந்த நீரலைகளே அவள் ஆடை அவள் இனிமை யானவள். முத்துக்களின் ஒளியே அவளின் மேற்போர்வை; அந்த நீர்மடந்தை இளைய அன்னத்தைக் கட்டிக் கொள்ளச் சிவந்த தாமரைக் கரங்களை நீட்டுகிறாள்.

முகத்தின் ஒளி நிலாஒளி போல அமைந்ததால் தாமரைகள் கூம்பின. தாமரை, வெயிலுக்கு மலரும்; நிலவுக்குக் கூம்பும். முத்தின் ஒளி உண்மையான நிலவொளி அல்ல, என்றாலும் தாமரை நிலவொளியாகவே கருதிக் கூம்பியது.

தாமரைக்குப் புற இதழ்களும் உள்ளன; அகஇதழ் களும் உள்ளன. முத்தொளியை நிலவொளியாகக் கருதிக் கூம்பியவை புற இதழ்களே. நீர்மடந்தை தாமரைக் கரங்களின் அக இதழ்களை விரித்தே வைத்திருந்தாள். இவ்வாறு

விரிந்த அகவிதழ் விரல்களால் பிள்ளை அன்னத்தைப் பிடிக்கிறாள்.

சற்று நிதானித்துச் சிந்தித்தால் 'ஆரா இன்பம் அளிக்கும் உள்ளத்து ஐப்புலன்' என்று முன்னர்க் கூறிய செய்தியொடு இதற்கு ஒப்புமை புலப்படும். 'ஆரா இன்பம் ஒன்று ஆர்ந்தனம் யாமே .... அதுவே....தீம்புனல் மடந்தை, பிடிப்பது கடுக்கும்' எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

பொய்யான நிலா ஒளியை மெய்யென்று கருதித் தாமரை இதழ்கள் கூம்பின. பொய்ம்மையை மெய்யென்று கருதி மெய்ஞ்ஞானம் புகவொட்டாமல் புறப் புலன்கள் கூம்பிக் கொள்கின்றன.

சீவனுக்கும் சிவனுக்கும் இணைப்புத்தரும் சித்து, இங்குத் தீம்புனல் மடந்தை. அது தூய்மையானது. திரிபினாலே புறப் புலன்கள் மயங்கினாலும் அது அகப் புலன்களை விரித்து ஆனந்தம் காட்டுகிறது. பாடற் பகுதியைப் பார்ப்போம.

அதுவே
கரைஎறிந்து ஆர்க்கும் பொருபுனல் படுகரில்
பணிலம்ஈன்று அளித்த மணிநிலாப் போர்ப்பத்
தருணவெள் எகினம் தன்னகத்து அடங்க
அருண முண்டகம் அகஇதழ் முகிழ்ப்பது
தெண்திரை உடுத்த தீம்புனல் மடந்தை
வெண்துகில் படாஅம் விரித்தனள் போர்த்து
வள்ளவாய்க் கமல மலர்க்கையால் வளைத்துப்
பிள்ளைவெள் எகினம பிடிப்பது கடுக்கும்

[எறிந்து - வீசி; ஆர்க்கும் - ஒலிக்கும்; புனல் - நீர்; படுகர் - நீர்நிலை; பணிலம் - சங்கு; மணி - ஒளி; தருணம்- இளமை; வெள் - வெண்மை; அருணம் - சிவப்பு; முண்டகம்- தாமரை; தெண் - தெள்ளிய; திரை - அலை; தீம் - இனிய; புனல் - நீர்; படாஅம் - போர்வை; வள்ளம் - கிண்ணம்; கடுக்கும் - போலும்.]

—சிவ சிவ

உ

சிவமயம்

# அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்

# கும்பாபிஷேக கமிட்டி

# விருத்தாசலம்

## மெய்யன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

மிகவும் பிரசித்தி பெற்றதும் மூர்த்தி-ஸ்தலம்-தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையதும், காசியிலும் வீசம் அதிகம் உள்ள நமது (விருத்தாசலம்) திருமுதுகுன்றம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற்று 35ஆண்டுகள் ஆகிவிட்டது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை (அஷ்டபந்தன) மருந்து சாத்தி மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டியது அவசியம்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்களால் கும்பாபிஷேக திருப்பணியானது 17—1—83ல் தொடங்கி வைக்கப் பெற்றது. விருத்தாசலம் மெய்யன்பர்கள் தனித்தனியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு சன்னதிக்கும், விமானங்களுக்கும் கும்பாபிஷேக சிலவுகளை உபயமாகச் செய்ய ஒப்புக்கொண்டு சில வேலைகள் நடந்து முடிந்திருக்கிறது. அருள்மிகு நாதசர்மா, அனவர்த்தனி, பராசக்தி, அண்ணாமலையார், பஞ்சலிங்கம், பாலாம்பாள், சண்டிகேஸ்வரர் ஆகிய விமான வேலைகள் ரூ. ஒரு இலட்சம் செலவில் முடிவடைந்துள்ளன. தற்சமயம் அருள்மிகு பெரியநாயகர் விமானம், அருள்மிகு விருத்தாம்பாள் ஆலய கட்ட கோபுர வேலை, வன்னிமர விமானம், அருள்மிகு பழமலை நாதர் ஆலய பிரகார சாலாகிரஹ விமானங்கள், நந்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கோயிலில் உள்ள அனைத்து மூர்த்திகளுக்கும் ரூ. 25,000/- அளவில் மருந்து சாத்தத் திருவுளம் கொண்டுள்ளார்கள். மேலும் வெளிப் பிரகார திருமதில், நந்திகள், ராஜ கோபுர முன் மண்டப வேலைகள், மற்றும் சுவாமி, அம்பாள் கோயில் மண்டப மேல் விதான படம் எழுதுதல் இன்னும் பல திருப்பணி வேலைகளும் கும்பாபிஷேகப் பொதுச் சிலவுகளும் நடத்த நிதி ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேல் தேவைப்படுகின்றது. விருத்தாசலம் நகர மெய்யன்பர்கள், அண்மையில் உள்ள கிராம வாசிகள், இதனைக்

கண்ணுறும் பக்தர்கள் ஒவ்வொருவரும் அவசியம் அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் திருப்பணிக்கும் கும்பாபிஷேகத்திற்கும் தாராளமாய் பொருள் உதவி செய்து அருள்மிகு விருத்தகிரீஸ்வரரின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

1—7—83
விருத்தாசலம்.

அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்
**கும்பாபிஷேக கமிட்டியினர்,**
**விருத்தாசலம்.**

---

குறிப்பு: பொருள் உதவி அனுப்பவேண்டிய முகவரி:-
பொருளாளர்,
அருள்மிகு ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்
கும்பாபிஷேக கமிட்டி,
எண்: 14, ஐயனுர் கோயில் தெரு,
விருத்தாசலம் - 606 001. [அஞ்சல்]

---

# நூல்நிறை

## திருக்கரந்தை ஆதிவராகப்பெருமாள் வருக்கக்கோவை

*[உரையாசிரியர்—பதிப்பாசிரியர்— பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்; பக்கம் —4 + 32 + 148; வெளியீடும், கிடைக்குமிடமும்:- மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர். சென்னை - 600 041; விலை – ரூ. 12 ]*

''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர்

பொருளாதலின் அதனை 'அகம்' என்றார்; — இது நச்சினார்க்கினியம்! அகத்திணையின் அனைத்துக் கூறுகளையும் ஒருங்கு தழீஇ அழகுற வெளி வந்துள்ளது இக்கோவை இலக்கியம்.

'பாவலற்காப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலின்' அருட்செயல்கள் அமைவுறப் பாடப் பெற்றுள்ளன.

கோவை இலக்கியத்தின் சிறப்பான அம்சங்கள், இயல்பான உவமை நலங்கள், கதைக் குறிப்புகள் எழிலுற இயைந்துள்ளன; ஆரா அமிர்தம் உண்டார்க்கன்றிப் பிறர்க்குப் பசியாறுது;- அன்னதே இஃதும்:

'பொன்னில் குன்றிக் காயோ பதிப்பது' - என்பது முதலானவை இலக்கிய வழக்கில் வந்த பேச்சு மொழி வடிவங்கள்; இது 'வாழ் வியலின் கண்ணாடி இலக்கியம்' என்பதை நிறுவும்.

'ஈட்டிய நோயும் அந்நோய்தீர் மருந்தும்' — இத்தொடர் - வள்ளுவத்தின் 'இருநோக்' கோடு ஒப்புடையது.

ஆராய்ச்சிக் குறிப்பும், அருஞ்சொற்பொருள் அகராதியும் இல்லை யேல் பிற மொழி, சமய சப்பிரதாயச் சொற்களின், நெறிமுறை களின் பொருள் காணமுடியாது போக நேரும்.

கோவையிலக்கிய ஆய்வாளர்க்கு நூலின் இறுதிப் பகுதி கலங் கரை விளக்கமாகும்.

நூல்நுவல் பொருள் மட்டுமன்று 'கோவை'; நூலின் புறப் பகுதிகளின் அமைப்பும் 'கோவை'யே.

இது டாக்டரய்யர் அவர்களின் நூலக வெளியீடு என்பது நூலின் பூணுக்குப் பூண்; இது சிறப்புடையது. ஆகவே பிற்படக் கிளக்கப் பெறுகிறது.

## நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

[ஆசிரியர்:- அத்தங்கி தாதாரியர் தொண்டன்; பதிப்பாசிரியர்:- எஸ். ஸ்ரீநிவாசையர்; பக்கம்:- 100 (2+94+4;) வெளியீடும் கிடைக் குமிடமும்:- இதுவும்டாக்டர் ஐயரவர்கள் நூலக வெளியீடே; விலை - ரூ. 10/=].

அந்தம் முதலாகத் தொடுக்கப் பெற்றுள்ள அந்தாதிப்பாக்களில் நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளின் அழகும், பதிமேய பரம் பொருள் அருட்சிறப்பும் இணைகின்றன; சிறப்பான, செறிவான கலவை:

சீதரனே, வீடணன், தன்மன், கிருதம்: முதலானவை நூலிற் காணப்பெறும் தமிழ்ப்படுத்தப் பெற்ற வடமொழிச் சொற்கள்.

நூலாசிரியரின் தமிழ், வடமொழி நூற்புலமையை நன்குணர முடிகின்றது.

சுரர்பரவுஞ் சந்தனத் திருமாலிருஞ் சோலையின் சீர்மை நயமுடன் காட்டப்பெறுகிறது.

'சிவவாக்கியற்குப் பரத்துவந் தேற்றிய' எனும் தொடரால் குறிக்கப் பெறும் சிவவாக்கியர் சித்தருள் ஒருவராக எண்ணப் பட்டவரா: அல்லது பிறரா என்பது ஐயம்:

பெருமாயக் கோலப் பிரான், அளகிரி வல்லி செல்வன், ஆன் அரிப் பைபபொருள், தொண்டை மண்டலச் சிங்கப்பிரான்– எனும் தொடர்கள் 'பாண்டவ தூதனின்' இலக்கிய நயங் குழைக்கப் பெற்ற அருட்டிரு நாமங்கள்;

வெஃகாவும் பாடகமும் ஊரகமும் பஞ்சரமா நீடிய மாலின் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களை மனக்கண்ணுல் தரிசிக்க முடியும்.

வாழும்படியும் பரியார்க்கும் பரதற்கும் வாய்க்கும் பெம்மானின் அயோத்தித் திருப்பதிப் பாடல் சுருங்கிய வடிவ இராம காதை.

சுருங்கக் கூறியும் விளங்க வைக்க முடியும்:– இது ஆங்கில முன்னுரையால் அறிவது.

நூற்றெட்டுத் திருப்பதி தொடர்பான பிற வகையான இலக்கிய வடிவங்கள் ஏறற வகையில் இயம்பப் பெறுகின்றன.

தமிழ் அந்தாதி நூல் அறிவை முகவுரையால் எளிதில் பெற முடியும்.

இது 'ஐயரவர்கள் நூலக வெளியீடுதான்' இது படிக்கத் தொடங்கிய பின் அறிய வருவதன்று: நூலின் அட்டை முகப்பே இதைச் சுட்டும்.

Books for hour-நிறையப் பெருகிய இந்நாளில் வெளி வருகிறது வாயிருந்தால் ஆற்றுமையைப் புலப்படுத்தும். அதன் ஆற்றுமையைத் தீர்க்க வேண்டியது கற்றறிந்த மாந்தர் கடன்.

'பண்டைப் பேரிலக்கியம் பல தமிழுலகில் கிடைப்பதற்கரிய தாயுள்ளது' எனும் குரலும், 'வெளிவராததை விரைந்து அளிக்க வேறு கதி இல்லை' எனும் குரலும் எங்கிருந்தோ காதில் வந்து விழுகிறது.

பனசை முருகு. சுவாமிநாதன்

# "9, 10, 11 - ஆம் திருமுறைகள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை"

கா. ம. வேங்கடராமையா எம். ஏ.,

(2)

## 9-ம் திருமுறை - திருவிசைப்பா

1. திருமுறைகண்ட புராணம் பாடியருளிய உமாபதிசிவாசாரியர் 'மோகமெறி திருவிசைப் பாமாலே' என்று இத்திருமுறையினைத் துதிப்பர்.

9-ம் திருமுறைக்கண்கண்ட பதிகங்கள் 29; அவற்றுள் தில்லையைப் பற்றியவை 16. பாடிய அருளாளர்கள் ஒன்பதின்மர்; இதனை

'செம்பொன்மணி அம்பலத்து நிருத்த ஞர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமாளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தஞர் கருவூர்த் தேவர்
நம்பிகாடவர்கோன் கற்கண்டரா தித்தர்
நன்குயர்வேணுட்டடிகள் திருவாலியமுதஞர்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதிராயர்
ஆகவிவர் ஒன்பதின்யர் தாமுறை கண்டடைவே'

இப்பாடல் முதல்வரியால், தில்லைத் திருமுறைகளைத் தொகுத்தலே, இத்தொகுப்பின் நோக்கம் என்பது போதரும்.

2. ''அடைவுறுமாளிகைத்தேவர் நான்கு; சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்ருே டிசைப்பா மூன்று;
திடமுடைய கருவூரார் பத்து; வீறின்
சிறந்தகாடவரிரண்டு; கண்டர்வேணுடர்
படிபுகழ்ஒவ் வொன்று; திருவாலி நான்கு;
பன்னுபுருடோத்தமஞர் இரண்டு; சேதிராயர்
உடைய திருக்கடைக்காப் பொன்று; ஆக இருபத்தொன்பான்; ஓது செய்யுள் முந்நூற் றறுபதினே டைந்தே''

என்ற பழம்பாடலால் யார் யார் எத்தனைத் திருப்பதிகங்கள் பாடினர் என்பது போதரும். இப்பாடலில் பாடற்றொகை 365 என்றுள்ளது; இற்றை ஞான்று கிடைத்துள்ளவை 301; 365 ஆதல் எங்ஙனம் என்று தெரிய கிற்றிலது.

3. திருவிசைப்பாப் பதிகங்கள் ஒவ்வொன்றுக்கும் பண்வரை யறை உண்டு. அதனைப் பின்வரும் பாடல் பகரும்:-

ஐந்துடன்நால் வருமுரைத்த
திருக்கடைக்காப் பிற்பண்
அறையின்மா ளிகைத்தேவர்
நாலுகிலொன்று காந்தாரம்;
முந்துகரு வூரர்பத்தின்
இரண்டுபுற நீர்மை;
மொழிந்திடுகா ந்தாரம்ஒன்று;
காடவாகோன் இரண்டின்
நந்தலில்சா ளரபாணி ஒன்று;
வேணாட் டடிகள்
நவின்ற தொன்று புறநீர்மை;
திருவாலி யமுதர்
பந்தமறச் சொல்நான்கின்
ஒன்றுநட்ட ராகம்;
பகர்ந்திடின்ஒன்று இந்தளம்;
மற்றெவையும் பஞ்சமமே.

இதிற்கண்டவற்றுள் சாளர பாணி என்பது முதலேழு திருமுறைகளிற் காணாத பண் ஆகும். பதிகம் பாடியவரே பண்ணின் பெயருணர்த்துதலுண்டு என்பது; கருவூர்த்தேவர் திரைலோக்கிய சுந்தரம் திருப்பதிகத்தில்,

"போற்றிசைப் பார் காந்தாரம்" என்றருளியதினின்று போதரும்.

4. வழிவழிச் சைவம் பெருக்கிய வர்களும், தமிழ்நாடு முழுவதிலும் வானளாவிய கோயில்களை அமைத்தவர்களும், திருமுறைகளைத் தொகுத்துப் பரப்பியவர்களும் திங்கட்பெருமாற்கு வழி வழியாளாய் மனம் செய் குடிப் பிறந்தவர்களும் ஆகிய சோழ வரசர்களுள், சிவஞானகண்டராதித்தர் என்று போற்றப்பெறும் கண்டராதித்த சோழர் பாடிய பதிகம் ஒன்று இத்திருமுறை யிலுள்ளது.

5. பாதாதிகேசமாக அதாவது அடி முதல் முடி வரை ஒவ்வொரு உறுப்பாகப் புகழ்தல் சங்கத் தமிழிலும் உண்டு. அதுவும் மானுடப் பெண்டிர் மாட்டு இசைப்பது கவி மரபு. ஆனால் மன்பதைகளைப் பாடாது இறைவனையே பாடும் மரபினுள்ளோராகிய தெய்வமாக் கவிஞர்,இறைவனின்பாதாதி கேசவருணனையுள்திளைத்து மகிழ்ந்துள்ளனர். அங்ஙனம் அமைதல் திருமாளிகைத் தேவர் திருவாலி யமுதனார் ஆகியோர் பாடி யருளிய தில்லைத் திருப் பதிகங்களிற் காணலாம்.

6. தில்லைப் பெருமானின் திருக்கூத்தில் ஈடுபட்டவர்கள் அடியவர்கள். ஆகவே கூத்தப்பெருமான்றன் ஆடலை வியந்துபோற்றாதாரில்லை என்னலாம். திருவாலி யமுதனார்,

உமையாள் காண விகிர்தனுடுமே,
நந்தி முழவங்கொட்ட
நாதனுடுமே,
சடைமேல் திங்கள் சூடித்
தேவனுடுமே,
அரவம் ஆட அனல்கையேந்தி
அழகன் ஆடுமே,
கொத்தார் சடைகள் தாழ
நட்டம் குழகனுடுமே,

என்று 'வானோர் பணியவும் மண்ணோர் ஏத்தவும் மன்னி யாடும்' ஆனந்த தாண்டவத்தைப் புகழ்ந்து பரவுதலே இவ்வருளாளர் தம் கோள் என்பது உறுதி.

7. சம்பந்தர் தில்லைவாழந்தணர்களைச் சிவகணங்களாய்த் தோன்றக் கண்டார் என்பர்: ''தென்தமிழ்ப் பயனுயுள்ள திருத்தொண்டத் தொகை முன்பாட, அன்று வன்றொண்டர் தம்மை அருளிய ஆரூரண்ணல், முந்திருவாக்கிற் கோத்த முதற் பொருளானவர்'' ''தில்லை வாழந்தணர்''. ஆகவே தில்லைவாழ் அந்தணரை அமயம் வாய்ப்புழிச் சிறப்பித்துப் பாடுவதும் இவ்வருளாளர் தம் கொள்கையாதல் பெறுதும்.

செல்வ மூவாயிரம் செழுஞ்
சோதி யந்தணர்,
தெய்வ வாய் மொழியார்
திருவாளர்,
வேதவென்றி மாருத
மூவாயிரவர்,
ஓவா முத்தீயஞ்சுவேள்வி
ஆறங்கநான் மறையோர்,
ஆவே படுப்பார் அந்தணாளர்
ஆகுதி வேட்டுயர்வார்,
இறைவனை ஏத்துகிறை
இளையாள்மொழி இன்தமிழால்
மறைவல நாவலர்கள்

என்று இன்னோரன்னவாறு கூறப் பெற்றமை காண்க.

8. சங்கத் தமிழில் பெரும் பகுதி அகத்திணைப் பாடல்களாம். திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழாகிய தேவாரத்திலும் அகப் பொருட்டுறை அமைந்த பனுவல்கள் பல. அம்மரபு திருவிசைப் பாக்காலத்தும் தொடர்ந்தது. திருமாளிகைத்தேவரின் கோயில்-உறவாகிய யோகம்; சேந்தனாரின் திருவாவடுதுறை, திருவிடைக் கழிப் பதிகங்கள்; கருவூர்த் தேவரின் திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திரைலோக்கிய சுந்தரம் திருப்பதிகங்கள்; திருவாலியமுதனார் கோயில்-பவளமால்வரை; புருடோத்தம நம்பி கோயில்-வாரணி, கோயில்-வானவர்கள்; சேதிராயர் சேனுலாம்-ஆகிய திருவிசைப் பாக்கள் அகப்பொருட்டுறை அமைந்தனவாம். அகப் பொருட்டுறை அமைந்தமையை ஆசிரியர்களே, 'கொழுந்திரள் வாயார் தாய்மொழியாகத் தூய் மொழி அமரர் கோமகனைச் செழுந்திரட் சோதிச்செப்புரைச் சேந்தன் வாய்ந்த சொல்'' என்றமையானும், ''வாசநன் மலரணி குழல் மடவார் வைகலும்

கலந்தெழு மாலைப்பூசல், மாசிலாமறை பல ஓது நாவன் வன்புருடோத்தமன் கடுரைத்த'' என்றமையானும், ''ஒண்ணுதலி காரணமா உம்பர் தொழு தேத்தும், கண்ணுதலான் தன்னைப் புருடோத்தமன் சொன்ன'' என்றமையானும் அறிதும்.

9. மூவர்க்கும் முற்பட்ட காரைக் காற்பேயார் அருளிய திரு விரட்டை மணிமாலையினின்றும் அற்புதத் திருவந்தாதியினின்றும் அந்தாதித் தொடை அமையப் பாடுதல் அறிய வருகிறது. இத் திருவிசைப்பாமாலையிலும், சேந் தனார் திருவாவடுதுறை திரு விடைக் கழிப் பதிகங்கள்; திரு வாலியமுதனார் கோயில் - பவள மால்வரை, கோலமலர்; புரு டோத்தமநம்பி கோயில் - வாரணி, வானவர்கள்; சேதி ராயர் - கோயில் - சேறுலாம் ஆகியவற்றுள் அந்தாதித் தொடை அமைந்துள்ளது. புருடோத்தமநம்பியின் கோயில்- வாரணி என்ற பதிகத்துள் பாட்டின் இறுதி அடியின் பாதிப் பகுதி அடுத்த பாட்டின் முதலில் அமைந்துள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

10. பழந்தமிழ் நூல்களுட் பழ மொழிகளைக் கூறும் நூல் பழ மொழி நானூறு என்பதை அறி வோம். திருநாவுக்கரசரும் திரு வாரூர்த் திருப்பதிகம் ஒன்றனுள் 'கனியிருப்பக் காய்கவர்தல் போன்ற பழமொழிகளை எடுத் தாண்டுள்ளார். அங்ஙனமே வேணாட்டடிகள் தம் பதிகம் முழு வதும் அரிதின்பொருள் கோடற் பாலதாய பழமொழிகளைப் பெய்துள்ளார். கைச்சாலும் சிறு கதலி இலைவேம்பும் கறிகொள் வார்; தம்பரனை சாயப் பற்றார்; பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்; இடுவது புல் ஒரெருதுக்கு ஒன்றினுக்கு வை யிடுதல் - முதலியன.

11. தலப்பெயரோடு கோயிற் பெயரும் குறிப்பிடுவது சமய குரவர் வழக்காகும். அங்ஙனமே கருவூர்த்தேவர், 'பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலம்' என்றும், 'களந்தை அணி திகழ் ஆதித்தேச்சரம்' என்றும் 'கீழ்க்கோட்டூர் மத்தனை மணி யம்பலத்துள் நின்றாடும் மைந்தனை' என்றும்; 'சாட்டிய குடியார் ஈட்டிய பொருளாய் இருக்கும்ஏழிருக்கை இருந்தவன்' என்றும், 'இஞ்சிசூழ் தஞ்சை ராச ராசேச்சரத் திறைவர்க்கே என்றும் கூறியமை காண்க.

12. முன்னோரைப் போற்றுதல்; மூவர் முதலிகளும் தம் நாளிலும் முன்னரும் திகழ்ந்த சிவனடியார் களைத் திருவருட் குறிப்பின்வழி போற்றியருளினர். அங்ஙனமே பூந்துருத்திநம்பிகாடநம்பி,

"கடியார் கணம்புல்லர்
கண்ணப்பர்" என்றும்
"அடியார் அமருலகம்
ஆள்" என்றும்,
"அல்லியம் பூம்பழனத்து
ஆமூர் நாவுக்கரசர்" என்றும்
"எம்பந்தவல்லிவினைநோய்
தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்
கோன்" என்றும்.

'களையா உடலோடு
சேரமான் ஆரூரன்
விளையா மதமாறு வெள்ளானை
மேற்கொள்ள"

என்றும், போற்றியுள்ளார். திருவாலியமுதனார்,

"சிலந்தியை அரசாள்கவென்று
அருள்செய்த தேவதேவன்"
என்றும்
"அடிகளவரை
ஆரூர்நம்பியவர்கள்
இசைபாட'
என்றும், பாடியுள்ளார். சேந்தனார்,

"தாதையத் தாளற
வீசியதுண்டு......"
என்றும்,

'பாடலங்காரப் பரிசில்
காசருளிப் பழுத்த செந்தமிழ்
மலர்சூடி
நீடலங்காரத்தெம் பெருமக்கள்',

என்றும் சிவனடியார்களின் செய்திகளைப் போற்றியுள்ளார்.

கண்டராதித்தர் சோழவரசர்: இவர், ',வெங்கோல் வேந்தன் தென்னனாடும் ஈழமும் கொண்ட திறல் செங்கோற் சோழன். கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த ...... தில்லையம் பலம்" என்று தம் தந்தை முதற் பராந்தக சோழனைக் குறித்திருக்கிறார்.

13. அருஞ்சொற்றொடராட்சி: இத்திருமுறையிற் கண்ட எடுத்த பாதம் - மழலைச்சிலம்பு - நீறணி பவளக் குன்றம் - தருணேந்து சேகரன் என்ற சொற்றொடர்கள் முதல் ராசராசன் காலத்துக் கல்வெட்டுகளில் இடம்பெறும் அளவு மக்கட்பெயராய்ச் சிறப்படைந்தன. கருவூர்த் தேவர் மொழுப்பு என்ற சொல்லைப் பத்திடங்களில் பெய்துள்ளார். கோறை, பீறல், சாடர், சாட்கை, மாதிமை, மாதி, சட்டளம், திணர், அக்கடா, அச்சோ, குண்டை' கினடி, கித்தி, கெந்தித்தல் முதலாய அருஞ்சொல்லாட்சியும் உண்டு.

பூந்துருத்தி நம்பிகாட நம்பியின் திருவாரூர்ப் பாடலில் "சக்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்ததனி முழு முதலுமாய்' என்ற வரியில், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணத் தொடக்கமும், பெரியபுராணத் தொடக்கமும், திருவருட் குறிப்பான் அமைந்தமை காண்க.

(வளரும்)

# சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் 18668

பழைய காலத்திலே எல்லோரும் பயித்தியக்காரர்கள் என்று நினைக்காதீர்கள். பனுவல் உரைத்ததாலோ பொற்றாளம் பெற்றதாலோ இல்லை. அவர்கள் எதையும் பெரிது படுத்தவில்லை. தாளமா, அது இறைவன். முத்துப்பந்தரா, அது இறைவன் கொடுத்தான் ஐயா, அதை விடு, அதை ஏன் பெரிதுபடுத்துகிறாய் என்றார்கள். அதனால் சமுதாயம் அவர்களிடம் ஈடுபட்டது அதிலிருந்து எப்படி வெளியே போவதென்று தெரியவில்லை. எல்லாவற்றையும் துறந்து விட்டுப் போடா என்றவன் சில நேரம் ஒன்றையும் துறக்கக் காணோம். ஒரே ஒரு உதாரணம் சொன்னால் போதுமென்று நினைக்கிறேன். சிந்தாமணிக்காரனைக் கண்டால் எனக்குக் கொஞ்சம் எரிச்சலாகவே இருக்கும். அவன் பாடுகிறான். அவர் அரையே அரைக்கால் டஜன் கல்யாணம் பண்ணியவர். கடைசியில் போகப் போகிறார். குரங்கைப் பார்த்து, ஆக மொத்த மனிதனைப் பார்த்து துறவு வரவில்லை, குரங்கைப் பார்த்துத் துறவு வந்தது. அவன் சொல்கிறான், நாடகம் பார்க்கக் கூடாது, சங்கீதம் கேட்கக் கூடாது என்பதுதான் அவர்களுக்கு அடிப்படை என்று. ஆனால் அந்தச் சமயத்தின் தலைவனாக உள்ள சீவகன் இருக்கிறானே, அவன்,

நாறியும் சுவைத்தும்
நரம்பின்னிசை
கூறியும் குளிர் நாடகம்
நோக்கியும்''

அடுத்த அடி நான் சொல்லத் தயாராக இல்லை. அது என்னுடைய தமிழாசிரியர் தினம் தினம் சொல்லிச் சுவைக்கின்ற பகுதி. எதை வேண்டாம் என்றானோ அதை அந்தத் தலைவன் செய்கிறான். மாறுபாடு எப்படி வருகிறது பாருங்கள். இவன் எதையும் அனுபவிக்கக் கூடாதென்று சொன்னான். அநுபவிக்க முடியாமல் கிடந்து தவிக்கிறது சமுதாயம். எங்கே மந்திரம் சொல்ல,

அதைக் கேட்டுக்கொண்டு பொருளை அனுபவிக்காதே என்றான். சரி, அப்படிக் கூறுபவன் எப்படி இருக்கிறான் என்றால் பாண்டியனிடத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறான். சமுதாயம் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. புரட்சி வருகிறது. கவலைப்படாதே, எல்லாவற்றையும் அனுபவி என்று வருகிறது. ஆகவே அது கரை உடைத்த வெள்ளம் மாதிரி வர ஆரம்பித்துவிட்டது. திருஞான சம்பந்தரின் கொள்கை இருக்கிறதே, தத்துவம், அது மடை உடைத்து மக்களை ஈர்த்தது.

இங்கே பாடுகிறார். "சிவபுரம் நினைபவர் திருமகளோடு திகழ்வரே". சிவபுரத்தை நினைத்துப் போகிறவன் கடைசியில் திருமகளுக்கு ஆசைப்படவேண்டுமா? மூக்கை, காதைப் பிடித்தால் திலோத்தமை, ஊர்வசி வருவார்கள் என்பது மாதிரி தானே? இது என்ன எண்ணம். அங்கே தான் நன்றாக நினைத்தேன் இவர்கள் சமுதாயத்தை எடை போட்டுவிட்டார்கள். ஒரு 5 சதவிகிதம் மக்கள் 'வானில் அரசாள்வர் ஆணை நமதே' —அதற்கு ஈடுபடுகிறார்கள். மீதம் 95 சதவிகிதம், இங்கே ஏதாவது கொடுங்கள், வானில் அரசாள்வதற்கு வேறு யாரையாவது பார்த்துக் கொள்ளுங்கள் என்பவர்கள்தான். நாளைக்கு வருகிற பலாப்பழத்தைவிட இன்றைக்குக் கிடைக்கிற களாப்பழம் உயர்ந்தது. ஆகவே இதையெல்லாம் வேண்டாமென்று ஒதுக்குகிறார்கள். தைர்யம் இல்லாதவர்களுக்குத் "திருமகளோடு திகழ்வரே" என்பது தேவை. இதிலே சிக்காதவர் சில பேர் இருக்கலாம். தெரியாமலா வள்ளுவன் கொண்டு போய் புகழைக் கடைசியில் வைத்தான்! அது பொன் தூண்டில். அதில் சிக்காதவனே கிடையாது. பார்த்தார் சிவப்ரகாசர். ஆண்டவன் தலையில் போட்டார். "புகழ்ச்சி விருப்பன்போலும் இகழ்ச்சி யறியா என்பு அணிவோனே" என்றார். புகழ்ச்சியில் சிக்காத அந்தப் பொன் தூண்டிலில் சிக்காத ஜன்மமே கிடையாது. ஆகவே, "புகழ் மிகும் உலகிலே" என்று சொன்னார். ஒரே தேவாரத்தில் இத்தனையையும் அடுக்குகிறார்.

திருஞானசம்பந்தர் ஏன் இந்த அளவுக்கு இறங்க வேண்டும். அங்கேதான் உறுதியாகக் கண்டேன். ஏனென்றால் இது ஆண்டவனுக்காகப் பாடின பாட்டலல; சமுதாயத்திற்காகப் பாடின பாட்டு என்று. சமுதாயத்திலே சந்தேகப்படுபவர்களிலிருந்து, துணிவு உள்ளவர்கள் வரையிலே எல்லோரும் இருப்பார்கள்.

"ஜெயமகள் தலைவரே" என்றார்; ஏனென்றால், சிலருக்குச் சண்டை

போட்டு வெற்றி பெற வேண்டு மென்ற எண்ணம், குறிக்கோள். ''கலைமகள் தர நிகழ்வரே'' – சில பேருக்குப் படிப்பு, குறிக்கோள். ஏன் சார் என்னவோ போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? இந்தக் குலம் தழைப்பதற்கு ஒன்று இல்லையே சார். இவருக்கே சாப்பாட்டுக்கு லாட்டரி. தினம் போய் பவதி பிட்சாந்தேகி என்று கேட்டால் தான் பிழைப்பு நடக்கும். இவர் பிள்ளை இல்லை யென்று கவலைப்படுகிறார். இது மனித இயல்பு. அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, ''குலம் நிலனிடை நிகழுமே'' — வம்சவிருத்தி இப்படி வளர்ந்துகொண்டிருக்கிற காலத்திலே பிள்ளை இல்லை என்றால் சனியன் விட்டதென்று இருக்க மாட்டான் மனிதன். யாருக்கு இல்லையென்றாலும் கவலையில்லை. அது அகங்காரத்தினுடைய உச்ச கட்டம். The Progeny is in cornation of self. இது யாருங்க? எல்லாம் நம்பளதுதாங்க. அது 'நம்பளதுதான்' என்று சொல்லும்போது அகங்காரத்தைப் பிழிந்து அபிஷேகம்பண்ணுவான்

தைப் பார்க்கிறார். ''சிவபுரம் நினைபவர் நிலனுடை நிகழுமே'' — இனி இதனுடைய விளக்கம் தான்

''பேயடையாபிரிவெய்தும்
பிள்ளையினோடுள்ள
நினைவாயினவே வரம் பெறுவர்''

என்பது அவனுக்கு மற்றது சொன்னால் எடுக்காது.

'ஐயுற வேண்டாம்' என்று ஏன் சொல்ல வேண்டும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இறைவனுடைய திருவருளை முழுவதும்பெற்றுத் தலைசுனுகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன பாடும் போது 'சந்தேகப்படாதீர்கள்' என்று ஏன் சொல்ல வேண்டும்? தன்னுடைய வார்த்தையிலே சந்தேகம் வந்துவிட்டதா! இந்த மாதிரி சிறு சிறு வார்த்தைகள் தான் என்னுடைய கண்களைத் திறந்தன. இவர்கள் பாடியது சமுதாயத்திற்காகத்தான். ஏன் என்றால் சமுதாயத்தில் ஐயப்படுபவர்களே அதிகம். கேட்டுக் கொண்டே வருவான். நீங்க சொல்வதெல்லாம் சரிதான், 'என்றாலும்' என்பான். 'நீங்க சொல்வதெல்லாம் சரி இருந்தாலும்' ... ... என்று சொல்பவனை என்ன பண்ணுவது?

''ஐயுற வேண்டாம் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையாரவர் தம்மைத்
தோயாவாந் தீவினையே''

இரண்டை இணைப்புப் பண்ணி விட்டார் இந்தப் பாட்டிலே. இம்மையிலே ஒரு பயன், மறுமைக்கு மாபெரும் பயன் ''வெண்காட்டு முக்குளநீர் தோய் வினையாரவர்'' என்ன ஆவார்கள்? பிள்ளை கிடைக்கும். அதாவது இந்த உலகத்திலே

அந்தப் பலனைப் பார்க்க வேண்டு மென்றால் அது கிடைக்கும். அடுத்த பலன், நரகம் இல்லை இது பல காலமாக இருந்துவருகிறது. ஆகவே இந்த இரண்டையும் இணைப்புப் பண்ணினார். ''பிள்ளை யினோடுள்ள நினைவாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும் வேயன தோளுமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையாரவர் தம்மைத் தோயா வாந் தீவினையே'' என்று சொல்கிறார். ஆக, இந்த வழி பாட்டுப் பலன்கள் யாவும் சமுதாயத்தைக் கருதிக் கூறப்பெற்ற வையே என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

(வளரும்)

---

* இக்கட்டுரைத் தொடர் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சை மாவட்டம் மேலையூரில் திரு தெ. பொ. மீ. அவர்கள் தலைமையில் பேசிய பேச்சின் எழுத்து வடிவமாகும். பேச்சு நடையிலிருந்து எழுத்து நடைக்கு மாற்றப் பெற்றுள்ளதேயன்றி வேறெம் மாற்றங்களும் செய்யாமல் வெளியிடப் பெறுகிறது.

-றி. ஆர்

## இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

### 1. மூக்கில் வரும் குருதி நிற்க

அருகம்புல்லின் சாறுடன் மாதுளம் பூவின் சாறு கலந்து கொடுக்க மூக்கிலிருந்து வரும் குருதி நிற்கும்.

### 2. குரல் வளம் பெற

காய்ச்சிய ஆவின் பாலுடன் சிறிதளவு வால்மிளகுத் தூள் கற்கண்டு சேர்த்துப் பருகக் குரல் வளம் பெறும்.

### 3. சிறுநீர்க்கட்டு

முள்ளங்கிக் கிழங்கின் சாறு எடுத்து நாளைக்கு 1 அவுன்ஸ் வீதம் சாப்பிட நன்கு சிறுநீர்போகும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# "மனம் எனும் பேய்க்குரங்கு"

'சித்தாந்த வித்தகர்'

ந.ரா. முருகவேள், M. A., M. O L.

**முன்னுரை:**

மனம் என்பது ஒரு வியக்கத்தக்க கருவி. அதிலும், மனித மனம் மிகவும் விபத்தற்குரியது. மனிதன் என்ற சொல்லே, மனம் என்னும் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதேயாகும். மனத்தின் இயல்பை நினைத்து உணர உணர, நாம் பெரிதும் வியப்பில் ஆழ்கின்றோம். மனம் என்பது, அணுபரிமாணம் உடையது என்று நியாய நூலார் கூறுவர். ஆனல், அதன்கண் மாறி மாறிக் கணந்தோறும் தோன்றும் எண்ண அலைகளைக் கருதினல், மனம் ஒருவகையிற் கடலினும் பெரியது எனத் துணிந்து சொல்லலாம்.

'மனம்போல வாழ்வு' என்பது பழமொழி. மனம் நம்மைத் தேவனுக்கியும் உயர்த்தும்; விலங்காக்கியும் வீழ்த்தும். நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும், மாற்றிக் காட்டும் இயல்பு மனத்திற்கு உண்டு. நிரயத்தைத் துறக்கமாகவும், துறக்கத்தை நிரயமாகவும் மாற்றும் வல்லமை, மனத்திற்கு உள்ளது. மனத்தின் இயல்பிற்கு ஏற்பவே, மனிதர்கள் உயர்வு அல்லது தாழ்வு எய்துகின்றனர். மனம் நம்மை நல்லவர்களாக்கி வாழவும் வைக்கின்றது; தீயவர்களாக்கிக் கெடுத்து வருந்தி உழலவும் செய்கின்றது.

**உருவகம்:**

மனத்தின் இயல்புகள் பலவற்றையும் ஆழ்ந்து உணர்ந்த அறிஞர்களும், கவிஞர்களும், அருளாளர்களும் அதனைப் பலவகைகளில் உருவகம் செய்து. ஏற்றபெற்றி புகழ்ந்தும் இகழ்ந்தும் உரைத்துள்ளனர். ''மனம் எனும் நெடுந்தேர்'' ''மனம் எனும் மாயப்புரவி'' ''மனம் எனும் தோணி'' என்றெல்லாம் பலவகைகளில் கவிஞர்கள் மனதின் இயல்பைக் கவின்மிக உருவகம் செய்து காட்டியுள்ளனர்

'கல்மனம்', 'இரும்புமனம்', 'மனம் எனும் காடு', 'மனக்குகை', 'மனக்கோயில்', 'மனமலர்', என்றும், இலக்கியங்களில் மனத்தைப் பற்றிய குறிப்புக்கள், ஆங்காங்கே அழகுற வருகின்றன.

குரங்கு:

இங்ஙனம் மனத்தின் இயல்பினை அறிஞர்கள் வெவ்வேறு வகைகளில் உருவகஞ் செய்து உணர்த்தியுள்ளனராயினும், அவை எல்லாவற்றையும்விட, ஓர் உருவகம் மிகச் சிறப்பாகவும், பொருத்த மாகவும் அமைந்து காணப்படுகின்றது. அதுதான் மனத்தைக் 'குரங்கு' என்று குறிப்பிடும் சிறந்த உருவகம் ஆகும். மனத்தின் இயல்புகளை உள்ளவாறு விளக்குதற்கு, இதனினும் சிறந்த பொருத்தமான உருவகம் பிறிதொன்றில்லை எனத் துணிந்து சொல்லலாம். குரங்கின் குறும்புகளும், மனித மனத்தின் பலவகை அலைவுகளும், பெரிதும் ஒத்துக் காணப்படுகிறது.

''மனமெனுமோர் பேய்க்குரங்கே!
மடப்பயலே! நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து
மருட்டாதே கண்டாய்!
இனமுறவென் சொல்வழி
யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ! யென் சொல்வழி
யேற்றிலையா னாலோ
தினையளவுன் னதிகாரஞ்
செல்லவொட்டேன்! உலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன்!
திருவருளாற் கணித்தே
நனவினெனை யறியாயோ?
யாரெனஇங் கிருந்தாய்?
ஞானசபைத் தலைவனுக்கு
நல்லபிள்ளை நானே!''

என அருட்டிரு இராமலிங்க அடிகளார், இவ்வுண்மை தெளிந்து அழகுற அருளிச் செய்துள்ள சிறந்த திருவருட்பாப் பாடல், இங்கு நாம் இனிது சிந்தித்து மகிழ்தற்குரியது:

பொருத்தம் :

மனத்தைக் குரங்காகக் குறிப்பிட்டு, இராமலிங்க அடிகளார் இயம்பியிருப்பதன் நுட்பம் இனிது உணர்ந்து போற்றத்தக்கது. குரங்கு ஒரு சிறிது நேரமும் வாளா இராமல், பலவகைக் குறும்புகள் செய்து கொண்டே இருக்கும். எங்குத் தாவித்தாவி ஏறி ஓடும். அதுபோல, மனமும் பலவகைகளில் அலைந்து திரியும். தகாத தீய பல எண்ணங்களை மாறி மாறி எண்ணிக்கொண்டு கிடக்கும். குரங்குகள் காடுகளில் திரியும், மலைகளில் ஏறும், மரக்கிளைகளில் தாவும், தன் விருப்பம்போல் எங்கும் சுற்றித் திரியும். அதற்கு ஏற்ப மனமும், உலகியல் வேட்கை ஆகிய காடுகளில் அலையும்; மகளிரின் தனங்களாகிய மலைகளில் உலவ விரும்பும்; ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் மாறிமாறித் தாவி, கீழும் மேலும் சுழன்று கரணமிடும்; நன்று தீது என்று பாராமல் எங்கும் சென்று எதையும் பற்றிக் கொண்டு திரிந்து அலைந்து உழலும். இத்தகைய பல பொருத்தங்கள் இருப்பதனாலேயே, சான்றோர்களும் ஞானிகளும் மனத்தைக் குரங்கு என்று தகவறிந்து கூறியுள்ளனர்.

குரங்கு இத்தகைய தனது குணங்களால் மிகவும் இழிந்தது போலக் காணப்படினும், தக்க ஒரு குரங்காட்டியின் தொடர்பு பெற்றால், நல்ல பயிற்சியும் பண்பும் பெற்றுச் சிறப்பு எய்துதலைக் காண்கின்றோம். அங்ஙனமே, நம்முடைய மனமாகிய குரங்குக்கும் ஒரு சிறந்த குரங்காட்டியின் தொடர்பும் பயிற்சியளிப்பும் ஏற்படுமாயின், மிகப்பெரு நலம் பயக்கும். குரங்கின் குறும்புகளையும் அலைவுகளையும் தடுத்துத் திருத்தி, நல்ல கலைப் பயிற்சியை அளித்துப் பழக்கி, அதனை நலமுற வாழ்விக்க வல்லவன், ஒரு குரங்காட்டியே ஆவான். அம்முறையில், நம் மனத்தையும் திருத்திப் பண்படுத்திச் சிறப்பு எய்துவிக்க வல்ல சிறந்த குரங்காட்டி ஒருவன் உளன். நாம் அவன்பால் நம் மனக்குரங்கை ஒப்படைத்தால், அவன் அதனைச் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான். அக்குரங்காட்டி எவனாதல் கூடும் என்று சொல்லவும் வேண்டுமோ?

நம் மனமாகிய குரங்கை நாம் ஒப்படைத்தால், அதனை நனியுவந்து ஏற்று நன்கினிது பழக்கி, நலமெல்லாம் அடைவிக்க வல்ல குரங்காட்டி, ஆண்டவனே ஆவான். குரங்காட்டியை அடைந்தாலன்றிக் குரங்கு திருந்தி உய்யுமாறில்லை; அதுபோல, ஆண்டவன்பால் அடைக்கலம் புகுந்து, அவன் வயப்பட்டு நின்று அன்பு செய்து ஒழுக முற்பட்டாலன்றி, மனக்குரங்கு திருந்திச் சிறப்புற்று நலம்

பெற்று உய்தற்குரிய வழி, பிறிது எதுவும் இல்லை. மக்கள் திருந்தி, பண்பட்டு மனத்துக்கண் மாசிலராய், அறவாழ்வு வாழ்வதற்கு இறைவனிடத்து ஈடுபாடும், இறைவழிபாடும் மிகப் பெரிதும் இன்றியமையாதனவாகும்.

***சிவானந்த லகரி :***

இவ்வுண்மையினைச் ''சிவானந்த லகரி'' என்னும் சிறந்த துதி நூலில், ஆதிசங்கரர் அவர்கள் அழகிய ஒரு சுலோகத்தின் (20) வாயிலாகத் தெளிவுறுத்திச் செவ்விதின் விளக்கியருளியுள்ளார்கள்.

''சிவபெருமானே! என்னுடைய மனம் இடையறாது எப் பொழுதும் உலகியல் மயக்கம் ஆகிய காட்டில், அலைந்து திரிந்து, கொண்டிருக்கின்றது; இளம் பெண்களின் தனங்கள் ஆகிய மலைக் குவடுகளில், ஓடியாடிச் சலனம் செய்து கொண்டுள்ளது; பலவகைப் பட்ட ஐம்புல ஆசைகள் ஆகிய கிளைகளில், விரைந்து ஓடி மாறி மாறித் தாவிக் கீழும் மேலுமாகச் சுழன்று உழலுகின்றது; தன் விருப்பம்போலக் கட்டுப்பாடு என்பது சிறிதும் இல்லாமல், எங்கெங்கோ சுற்றித் திரிந்து கெட்டு அலைகின்றது. இடையறாது அலையும் இயல்புடைய என்னுடைய மனம் ஆகிய குரங்கை, நின்பால் யான் ஒப்படைக்கின்றேன். அதனைத் தாங்கள் பக்தி என்னும் கயிற்றினால், கெட்டியாகக் கட்டி அடக்கி ஒடுக்கித் தங்கள்பால் வைத்துக்கொண்டு பணிகொள்ளுங்கள்!

ஏனெனில், தாங்கள் அனைவருக்கும், இன்பமும் மங்களமும் செய்யும் இயல்புடையீர்; ஆதலின், இக் குரங்கையும் திருத்தி நலஞ் செய்தல் தங்கள் கடமை. மேலும், தாங்கள் எல்லா இடங்களிலும் பரவி விளங்கும் பண்புடையவர் ஆதலின், தங்களுக்கு என்னுடைய மனக் குரங்கு எந்த இடத்தில் அலைந்து சுற்றிக் கொண்டிருக்கின்றது என்று தேடி அறிந்து பிடித்து அடக்கியாளவும் மிகவும் எளிது.

அங்ஙனம் செய்தால், குரங்குக்கு மட்டுமே நலம் பயப்பதன்றி, தங்களுக்கும் மிக உதவியாக இருக்கும்; எங்ஙனமெனில், தாங்களோ கையிற் கபாலத்தை வைத்துக் கொண்டு, அடியார்களின் அன்பு ஆகிய பிச்சையை எடுத்துலவும் தொழில் உடையவராகத் திரிகின்றீர்; பிச்சை எடுப்பவர்கள், வாளா தாம் மட்டுமே செல்லாமல், ஒரு குரங்கையும் கயிற்றிற் கட்டி உடன் அழைத்துக் கொண்டு செல்லின், அவர்களுக்கு அது பெரிதும் உதவியாக அமைதலைக் காண்கின்றோம்.

ஆகவே, கையிற் கபாலம் ஏந்திக் கபாலி எனவும், பிச்சை எடுத்தலாற் பிட்சாடனர் எனவும் விளங்குகின்ற தாங்கள், என்னுடைய மனம் ஆகிய குரங்கைப் பக்தி என்னும் கயிற்றினல் கட்டி, அழகுற ஆடுமாறு பழக்கி, பிச்சை எடுக்கும் தங்களின் தொழிலுக்கு உதவியாகத் தங்கள்பால் இனிது வைத்துக் கொள்ளுங்கள்'' என்பது ஆதிசங்கரரின் அன்பார்ந்த வேண்டுகோள்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளை:

'சிவானந்த லகரி' என்னும் துதி நூலில்வரும் அந்தச் சிறந்த சுலோகத்தின் பொருளைப் பின்வரும் அழகிய பாடல், தன்கண் அமையக் கொண்டுள்ளது.

''மோகமாம் அடவி திரிந்து, அரிவையர் தம்
முலைக்குவட் டிடைநடனம் ஆடித்,
தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்
தாவும்என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பக்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்க! யான் கொடுத்தேன்;
ஏகநா யகனே! தில்லையில் ஆடும்
இறைவனே! எம்பெரு மானே!''

என்பது, அந்தச் சிவானந்த லகரிச் சுலோகத்தின் சிறந்த செந்தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுளாகும்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் எனத் திகழ்ந்திருந்த பெருங்கவிஞர் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், தமது முதுமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையிற் கிடந்த பொழுது, தம்மைக் காணவந்த அன்பர் ஒருவர், தமது பேச்சுக்கு இடையே கூறிய சிவானந்தலகரிச் சுலோகத்தினை வியந்து சுவைத்து, உடனே தமது மாணவர் ஒருவரை ஏடும் எழுத்தாணியும் கொணரச் செய்து, எழுதிக் கொள்ளுமாறு பணித்து மொழி பெயர்த்துப்' பாடி அளித்தது இந்த இனிய அரிய செய்யுள்.

முடிவுரை:

இதன் சொற்பொருட் சுவை நலங்களில் ஈடுபட்டு இன்புறுவதுடன் நாம் நம் மனம் ஆகிய குரங்கை, பிட்சாடன வடிவம் கொண்டு திகழும் கபாலீசுவரப் பெருமான் ஆகிய குரங்காட்டியின் பால் ஒப்படைத்து, அன்பு செலுத்தி நலம் பலவும் பெற முயலுவோமாக;

# திருக்கணித பஞ்சாங்கம்

## தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-ஆடிமீ (1983 - ஜுலைமீ - ஆகஸ்டுமீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | | ஆங்கிலம்வ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | 17 | ஞாயிறு | அஷ்டமி 19-57 | சித்திரை 19-39 |
| | | | | | துலாசந்திரன் 7-41 |
| 2 | | 18 | திங்கள் | நவமி 19-41 | சுவாதி 20-06 |
| 3 | | 19 | செவ்வாய் | தசமி 20-05 | விசாகம் 21-12 |
| | | | | | விருச்சிக சந்திரன் 14-52 |
| 4 | | 20 | புதன் | ஏகாதசி 21-04 | அனுஷம் 22-53 |
| 5 | | 21 | வியாழன் | துவாதசி 22-34 | கேட்டை 25-02 |
| | ஜூ | | | | தனுசு சந்திரன் 25-02 |
| 6 | ல | 22 | வெள்ளி | திரயோதசி 24-26 | மூலம் 27-33 |
| 7 | ை | 23 | சனி | சதுர்த்தசி 26-36 | பூராடம் நாள் முழுவதும் |
| 8 | | 24 | ஞாயிறு | ○பௌர்ணமி 28-57 | பூராடம் 6-20 |
| | | | | | மகர சந்திரன் 13-03 |
| 9 | | 25 | திங்கள் | பிரதமை நாள் முழுவதும் | உத்திராடம் 9-16 |
| 10 | | 26 | செவ்வாய் | பிரதமை 7-23 | திருஓணம் 12-17 |
| | | | | | கும்ப சந்திரன் 25-47 |
| 11 | | 27 | புதன் | துதியை 9-49 | அவிட்டம் 15-16 |
| 12 | | 28 | வியாழன் | திரிதியை 12-09 | சதையம் 18-09 |
| 13 | | 29 | வெள்ளி | சதுர்த்தி 14-17 | பூரட்டாதி 20-48 |
| | | | | | மீன சந்திரன் 14-10 |
| 14 | | 30 | சனி | பஞ்சமி 16-05 | உத்திரட்டாதி 23-07 |
| 15 | | 31 | ஞாயிறு | சஷ்டி 17-26 | ரேவதி. |
| | | | | மீன சந்திரன் 24-57 | மேஷ சந்திரன் 24-53 |
| 16 | | 1 | திங்கள் | சப்தமி 18-14 | அசுவனி 26-17 |
| 17 | ஆ | 2 | செவ்வாய் | அஷ்டமி 18-20 | பரணி 26-47 |
| 18 | க | 3 | புதன் | நவமி 17-43 | கார்த்திகை 26-37 |
| | ஸ் | | | | ரிஷப சந்திரன் 8-49 |
| 19 | டு | 4 | வியாழன் | தசமி 16-21 | ரோகிணி 25-43 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 5 | வெள்ளி | ஏகாதசி 14-16 | மிருகசீரிஷம் 24-08 |
| | | | | மிதுன சந்திரன் 13-00 |
| 21 | 6 | சனி | துவாதசி 11-32 | திருஆதிரை 21-56 |
| 22 | 7 | ஞாயிறு | திரயோதசி 8-17 சதுர்த்தசி 28-39 | புனர் பூசம் 19-17 |
| | | | | கடக சந்திரன் 13-59 |
| 23 | 8 | திங்கள் | அமாவாசை 24-48 | பூசம் 16-21 |
| 24 | 9 | செவ்வாய் | பிரதமை 20-55 | ஆயில்யம் 13-17 |
| | | | | சிம்ம சந்திரன் 13-17 |
| 25 | 10 | புதன் | துதியை 17-10 | மகம் |
| 26 | 11 | வியாழன் | திரிதியை 13-45 | பூரம் 7-35 உத்திரம் 29-19 |
| | | | | கன்னி சந்திரன் -58 |
| 27 | 12 | வெள்ளி | சதுர்த்தி 10-50 | அஸ்தம் 27-40 |
| 28 | 13 | சனி | பஞ்சமி 8-33 | சித்திரை 26-14 |
| | | | | துலா சந்திரன் 15-06 |
| 29 | 14 | ஞாயிறு | சஷ்டி 7-02 | சுவாதி 26-37 |
| 30 | 15 | திங்கள் | சப்தமி 6-19 | விசாகம் 27-19 |
| | | | | விருச்சிக சந்திரன் 21-04 |
| 31 | 16 | செவ்வாய் | அஷ்டமி 6-26 | அனுஷம் 28-45 |


Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

# நடராஜ விலாஸ்

# ஜுவல்லரி ஹால்

## சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.

தென்னார்க்காடு மாவட்டம் — 608 001

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

# தில்லை அருள்மிகு நடராஜப் பெருமான் திருக்கோவிலில்

# திருவாசகப் பிரசங்கம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

'கயிலைமாமுனிவர்'

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் நடைபெறுவது.

இடம்: தில்லை அருள்மிகு நடராஜப் பெருமான் திருக்கோவில்

நாட்கள்: 9—7—83 சனிமுதல் 13—7—83 புதன்வரை 5 நாட்கள்

நாடோறும் மாலை 6-45 மணி முதல் 8 மணி வரை

பேராசிரியர் திரு. அ. அறிவொளி M. A. அவர்கள்

பொருள்: "திருவாசகத்தில் சிவபுராணம்"

நமரங்காள் வருக!

ஆணைப்படி

G. வாகீசம் பிள்ளை

S. திருநாவுக்கரசு பிள்ளை

சிதம்பரம்.

1—7—83

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

# திருமூலர் திருமந்திரம்

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

### நல்ல மாதுக்கு நாதன்

உயிர்களைப் பக்குவப் படுத்தி இறைவனோடு சேர்ப்பவள் பராசக்தி. தாயொடு சென்று, பின் தாதையைக் கூடவேண்டும். பராசக்தியே சிவத்தின் திருவருள். அவன் அருளாலே அவன்தாள் வணங்குகிறோம். இறைவன் இனிமையான உயிரில் நிலையாகப் பொருந்தியிருக்கும் புனிதன். கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு எனும் நான்கு திசைகளுக்கும் அவன் தலைவன். குழந்தையின் நோயறிந்து மருந்தூட்டும் தாயான பராசக்திக்கும் தலைவன். பால் நினைந்தூட்டுபவள் தாயாதலின் நல்ல மாது என்று பராசக்தியைக் கூறுகிறார் திருமூலர். மேலே குறிக்கப்பட்ட நான்கு திசைகளில் தெற்குத் திசையின் தலைவனாக விளக்கும் எமனை உதைத்த காலகாலன் சிவபெருமான். அவனை நான் புகழ்ந்து பேசுகிறேன் என்கிறார் திருமூலர்.

போற்றிசைத் தின்னுயிர்
மன்னும் புனிதனை,
நாற்றிசைக் கும், நல்ல
மாதுக்கும் நாதனை,
மேற்றிசைக்குள், தென்
திசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான்
கூறுகின் றேனே. (2)

என்பது இரண்டாவது திருமந்திரம். ''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்பதால் அப் ''பேசாப் பொருளைப் பேசத்'' துணிகிறார் திருமூலர். தலையின் முன்புறம் பின்புறம் வலப்புறம் இடப்புறமாகிய நான்கு பக்கங்களின் இயக்கங்களுக்கும் இறைவன் தலைவனாதலின் நாற்றிசைக்கும் [நல்லமாதுக்கும்] நாதன் என்றார். மன இருள் மாறினால் மரணத்துக்கே மரணம் வரும். கூற்றுதைப்பது நம் மன இருளை மாற்றும் கருணையாகும். கூறும் நாவே முதலாகக் கூறும் காரணம் எல்லாமான சிவபெருமானை வாழ்த்தி அவனருளைப் போற்றுவதும் அதன் மூலம் மனஇருள் மாற்றுவதும் இப்பாடலின் குறிக்கோள்களாகும்.

### பக்க நின்றார் அறியாத பரமன்

நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன் இறைவன். தூரத்திலே இருந்து நினைப்பவர்

களுக்குப் பக்கத்திலே இருக்கிறான். பக்கத்தில் இருந்தும், நினைக்க முடியாமல் இருப்பவர்களுக்குத் தூரத்தில் நிற்கிறான். பக்கத்திலிருக்கும் தேவர்களால் உணரமுடியாத சிவபெருமான், பக்தி செய்யும் திருமூலருக்கு எளியவனாய்க் காட்சியளிக்கிறான். உயிர்களோடும் உடனாய் இருப்பவன் சிவன். அழிவற்ற தேவர்களால் நக்கன் என்று பரவப் பெற்றவன் அவன். பக்கம்நின்றார் அறியாத பரமன். அவனை நான் பக்கத்திலே போய் அறிந்து நினைந்து வணங்குகிறேன் என்று மகிழ்கிறார் திருமூலர்

ஒக்க நின்றானை, உலப்பிலி தேவர்கள்
நக்கன்என் றேத்திடும் நாதனை, நாள்தொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றி செய் வேனே. (3)

என்பது மூன்றாவது பாடல். தண்ணீருக்கு வடிவமில்லை. ஆனால் எந்தப் பாத்திரத்தில் வைக்கிறோமோ அந்தப் பாத்திரத்தின் வடிவத்தைத் தண்ணீர் பெறுகிறது. அதுபோல நினைப்பவர் நினைக்கும் அளவுக்கு நெருங்கி வருகிறான் இறைவன். பக்தரின் உணர்வோடு ஒக்க நிற்பதால் இறைவனை ''ஒக்கநின்றான்'' என்கிறார் திருமூலர். நக்கன் என்றால் ஆடையற்றவன் என்று பொருள். திசைகளையே ஆடையாகப் பெற்றவன் சிவபெருமான். ஆண், பெண் வேறுபாடு அற்றவன் இறைவன். அவனுக்கு எதற்கு ஆடை? அவனுக்கு ஆடை தைக்க யாரால் ஆகும்? பாதம் இரண்டும் வினவினால் பாதாளம் ஏழையும் தாண்டும். சோதி மணிமுடி சொல்லைக் கடந்தது. அண்டங்கள் எல்லாம் அவனடித் தூசுகள். எனவே ஆடையற்றவன் என்று போற்றப் பெறுகிறான் அவன். அந்தப் பெருமான் இயல்பு என்ன? பக்தருக்கு எளியனாய்ப் பக்கத்துணையிருப்பான் சொக்கலிங்கப் பெருமான். ஆனால் நாள் தோறும் பக்கத்திலே நின்று கொண்டிருப்பவர்கள் பக்தி வழியில் நிற்காவிட்டால் ''பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பான்''. ஆண்டவனுடைய அருமையில் எளிய அழகைக் காட்டும் இப்பாடல் கடந்தும் உடனாகியும் விளங்கும் கடவுள் தத்துவத்தைக் காட்டுகிறதல்லவா!



# வாடாமல்லிகை

(சென்ற இதழ்த்தொடர்ச்சி)

டாக்டர் சொ. சிங்காரவேலன்
எம். ஏ., பிஎச். டி.,

18666

## காட்சி 2

இடம்: புத்தூர் — சடங்கவி சிவாசாரியார் இல்லம்:

காலம்: அந்திவேளை

உறுப்பினர்: புனிதவதி, சடங்கவி சிவாசாரியார், நரசிங்கமுனையர், பிறர்.

[சிவலிங்கத் திருவுருவின் முன், கண்மூடி வழிபாடு செய்து கொண்டிருக்கின்றாள் புனிதவதி; சடங்கவி சிவாசாரியார் மகள்; நம்பியாரூரர் மணம் தடைப்பட்டதனால் மணப்பெண்ணாக நின்ற புனிதவதியின் உள்ளம் படும்துயரம் அவளது கண்ணீர் மாலையாக வெளிப்படுகின்றது; தூரத்தில் ''ஓம் சிவாய நம'', 'ஓம் சிவாய நம' என்ற மந்திரகானம் ஓர் அழகிய இசையாக வந்து இழைகின்றது

புனித : (கண்விழித்து) எல்லாம் வல்ல ஆண்டவனே! இது என்ன நாடகம்? இது என்ன சோதனை? உன்னையே நம்பி, உன்னையே தொழுது, உன்னையே பாடி, உன்னையே தேடி, எங்கும், எல்லாவற்றிலும் உன்னையே கண்டு வந்த இந்தப் பெண் பிறப்பிற்கு நீ இவ்வளவு பெரிய சோதனையைத் தரலாமா, பெருமானே! தாங்குவேனா நான்!...... வேதாகம விதி வழுவாது உன்னைப் பூசித்துவரும் என் தந்தையார் உள்ளம்தான் இதனைத் தாங்குமா? ஏன் இந்த விளையாட்டு? ஏன் இந்த விளையாட்டு? (கண்ணீர் உகுக்கின்றாள்)

நம்பியாரூரர்- திருமுனைப்பாடி நாட்டின் அரசர் நரசிங்க முனையரின் அன்பிற்குப் பாத்திரமானவர் – திருநாவலூர் சடையனுர் இசைஞானியார் தவத்தின்பெற்ற திருவருட் செல்வர் என் மணவாளனுக வந்து விட்டார் என்று மகிழ்ந் திருந்தேனே! கொட்டு மேளத்திற்கிடையே- நாதஸ்வர ஓசையின் இனிய கானம் இழையோட என்னுடைய கழுத்திலே தம் திருக்கரத்தால் மாங்கல்யம் சூட்டுவார் என்று இன்பக்கனவுகளிலே மிதந்திருந்த என் எண்ணத்தை ஒரே நொடியில் நொறுக்கி விட்டாயே, அப்பா! இது தகுமா? ...தருமமா?...... என் வாழ்விலே புகுந்து விளை யாட வேண்டும் என்று உன் திருவுள்ளத்திலே ஏன் தோன்றியது பெருமானே! நான் என்ன அபராதம் செய்தேன் உனக்கு!

(கண்ணீர் உகுக்கின்ருள்)

(கண்ணீர் உகுக்கின்ருள்) தந்தையான சடங்கவி சிவாசாரி யார் வருகின்ருர்; கண்களைத் துடைத்துக்கொண்டே எழு கின்ருள் புனிதவதி)

சடங்: அம்மா, புனிதவதி! என்னம்மா இது? நீ நடந்ததையே நினைத்து...... கண்ணீர் விடலாமா அம்மா? மனத்தைத் தேற்றிக் கொள் அம்மா!

புனித: அப்பா! என்னைத் தோள்மேலும் மார்பின் மேலும் தூக்கிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தீர்களே...தாயில்லாப்பெண் என்று அளவு கடந்த பாசத்தைக்கொட்டி வளர்த்தீர்களே! அதற்கு நான் தங்களுக்குத் தந்த பரிசைப்பார்த்தீர் களா?...... நான்...... தந்த பரிசை......

சடங் போதும் அம்மா புனிதா! போதும்! வெண்ணெய் நல்லூர்ப் பித்தன் ஆடிய நாடகத்தால், நம்பியாரூரர் சமயம் வளர்க்கும் சான்ருேராய் மாறித் தவவாழ்க்கை மேற் கொண்டதிலே மகிழ்ச்சிதான் அம்மா! ஆனல் தெய்வமலர் போன்ற உன்னுடைய வாழ்வில்தான் எந்நாளும் மறை யாத அவலம் வந்து சூழ்ந்துவிட்டதை எண்ணினல்...... என் மூச்சே நின்றுவிடும் போல் இருக்கிறதம்மா!

புனித: (விரைந்து) அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா! நீங்கள் வாழவேண்டும் அப்பா! நீங்கள் வாழவேண்டும்! திருமஞ்சனம் செய்வித்து, வழிபாடு செய்த இந்தப் பெருமான் திருத்தொண்டிற்காக நீங்கள் வாழத்தான் வேண்டும்!

சடங்: உண்மைதான் அம்மா! ''என்கடன் பணி செய்து கிடப்பதே!'' ''என்கடன் பணிசெய்து கிடப்பதே!''

புனித: அப்பா! நம்முடைய புத்தூர்க்கே ''மணம் வந்த புத்தூர்'' என்ற பெயர் மாறிவிட்டது பார்த்தீர்களா? ஊரார் எல்லாம் தங்கள் வீட்டுத் திருமணம் என்றே என் மணத்தை நினைத்துக் கொண்டாடினூர்கள்; பார்த்தீர்களா?...... ஆம் ......தடுத்து ஆட்கொண்டான் பெருமான்! அவர் என்ன செய்வார் அப்பா! உலகத் தொடர்பு வேண்டாம் என்று சிவபிரான் முடிவுசெய்து விட்ட பிறகு,......போட்ட முடிச்சை ஆரப்பா அவிழ்க்க முடியும்?

சடங்: ஆம் ; அம்மா! உனக்கிருக்கும் உண்மை ஞானம் எனக்கு இல்லாமற் போய்விட்டது. புனிதவதி! ஆனுல்......

புனித: என்னப்பா?......

சடங்: உன்னுடைய வாழ்வின் தொடக்கத்தில் வீணையிலே எதிர்பாராதபடி நரம்பு ஒன்று 'சுரம்' மாறி ஒலித்தாலும், உன்னுடைய நல்வாழ்வின் 'ஆதார சுருதி' இன்னும் மாறவில்லையம்மா!

புனித: (புரியாதபடி) என்னப்பா சொல்கிறீர்கள்?

சடங்: ஆமாம் அம்மா! உன்னுடைய வாழ்வு மலரத்தான் போகிறது! உன்னுடைய கண்ணீர் உலரத்தான் போகிறது! பால்வடியும் உன் அழகு முகத்தில் புன்னகை பூத்த புது மலராக மலரத்தான் போகிறது!

[நரசிங்க முனையர், அமைச்சருடன் உள்ளே புகுகின்ருர்]

நர: புத்தூர் சடங்கவி சிவாசாரியரே! உங்கள் வாக்குப் பொய்க்காது! உங்கள் மகளது வாழ்வு மலர்ந்துவிட்டது!

சடங்: யார் மன்னர்பிரானு? வரவேண்டும்; வரவேண்டும்! இந்த ஏழையின் குடிலுக்கு அரசர் பெருமான் எழுந்தருள்வதற்கு

என்ன தவம் செய்தேன் நான்! புனிதா! மன்னர்பிரானை வணங்கம்மா!

புனித; திருமுனைப்பாடி நாட்டை வளநாடு ஆக்கும் மன்னர் பெருமானுக்கு இந்த அபலைப்பெண்ணின் வணக்கங்கள்!

நர: அம்மா! சிவபெருமான் அருளால் உன் வாழ்வில் நலமெல்லாம் பொங்கட்டும்! சிவாசாரியரே! நான் ஒரு நல்ல முடிவுடன் வந்திருக்கின்றேன்!

சடங்: என்ன?...... நல்லமுடிவா?

(புனிதவதியை நோக்குகின்றார்)

நர: ஆம் அந்தணர் திலகமே! நல்ல முடிவு தான்! தடைப்பட்டுப் போன திருமணம் நடைபெறவே வேண்டி மீண்டும் புனிதவதியின் வாழ்வு புதுமணம் பெற்றுப் பொலிய வேண்டும்!

சடங்: வேந்தே! தாங்கள் கூறுவது...

நர: விளங்கவில்லையா வித்தகரே! நம்பியாரூரன் என் வளர்ப்பு மகன்! நான் பெற்ற மகன் சிவபராக்கிரமன் இருக்கின்றான்! புனிதவதியின் எதிர்காலத்தைப் பொற்காலம் ஆக்க என் புதல்வன் இருக்கிறான்! ஆம்! புனிதவதியின் ஒளி மிகுந்த எதிர்காலத்தை ஒவ்வொரு நொடியும் எதிர்நோக்கி நிற்கின்றாள், அமுதவல்லி! என் துணைவி!

புனித : (செவிகளைப் பொத்திக்கொண்டு)

சிவ! சிவ! வேந்தே! போதும்! தங்களது அன்பு கனிந்த வார்த்தைகள் கனல் கமழும் பூக்களாக என் உள்ளத்தில் வெப்பக்கீற்றுகளாக விழுகின்றன!

நர : (உணர்ச்சிப் பெருக்குடன்) புனிதா! எங்களைத்தடுக்காதே அம்மா உன் இனிய எதிர்காலம் ஒன்று மட்டுமே எங்கள் கண்ணில் தெரிகிறது. நீ வாழவேண்டும்! சிவபராக்கிரமனுடைய வீரவாழ்வின் விடிவெள்ளியாக! திருமுனைப்பாடி நாட்டின் இளவரசியாக! எங்கள் உள்ளமெலாம் இன்பம் பரப்பும் அமுதக்கொடியாக!

சடங் : மகளே! என்ன திருவருள் பொருத்தம் பார்த்தாயா? என்னுடைய நெஞ்சம் தொடங்கிய நினைவு அலைகள் நம் அரசர் பெருமான் திருவாய்மொழியாக வெளிவருகின்ற அற்புதத்தைப் பார்த்தாயா? மறுக்காதே, அம்மா மறுக்காதே!

புனித : (நிதானமாக, உணர்ச்சி ததும்பிய நெகிழ்வுடன்) அரசே! அருமைத் தந்தையே! உங்கள் அன்பிலே நனையும் இந்தச் சிறுமியின் சொற்களுக்குச் செவி சாய்க்க மாட்டீர்களா?

இருவரும்: சொல்லம்மா சொல்!

நர : மறுப்புக் கூறுது எங்கள் மனத்தில் மகிழ்ச்சித் தென்றலை வீசச்செய் புனிதவதி!

சடங் : நீ கூறும் வாய்மொழியில்தான் அம்மா, இந்த ஏழைக் கிழவனின் வாழ்வு அடங்கியிருக்கிறது!

புனித . அருமைத் தந்தையே! வணக்கத்திற்குரிய வேந்தே! என்னை மன்னித்துவிடுங்கள்; பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்; இந்தப் புனிதவதி தன் 'புனிதம்' கெடாமலே சிவபெருமானின் சேவடிகளிலே சமர்ப்பிக்கப்பட்டுவிட்ட காணிக்கை அப்பா! இந்த மலர் - சிந்தனையாலேயே நம்பியாரூரை வணங்கி, வாழ்வும் பெற்றுச் சிவபிரான் பெருங்கருணைப் பெருவெள்ளத்திலே துளையம் இடும் துரும்பு அரசே, நான்! எனக்காக இந்த உலகியல் வாழும் வாழ்வு இனி வேண்டும் என்கின்றீர்களா?

நர : அம்மா ! ...

புனித : மன்னித்தருளுங்கள், மன்னர்பிரானே! கலிப்பகையார்க்கு நிச்சயிக்கப்பட்ட திலகவதியார், காலமெல்லாம் அவர் நினைவோடேயே வாழவில்லையா?... அவர் பிறந்த மண் இல்லையா இது? திருவாய்மூர் இங்கிருந்து நெடுந்தொலைவிலா உள்ளது? அவர்கள் வாழ்ந்த காலமோ இன்னும் அண்மையில்தானே உள்ளது! 'மனைத்தவம்' புரிந்த அந்த மாதரசியின் வழியிலே செல்ல எனக்கு அநுமதி வழங்கியருளுங்கள்;

(வணங்குகின்றாள்)

நர : அம்மா! உன் மனப்புண்ணின் ஆழம் புரிகிறது; காலம் உன் துயரத்தின் வெப்பத்தை மாற்றும் என்று நம்புகின்றேன்! நான் வருகின்றேன் அம்மா! வருகின்றேன் வேதியரே!

[அமைச்சர் முதலியோருடன் அரசர் செல்ல – விடை கொடுத்தனுப்புகின்றார் சடங்கவி சிவாசாரியார்]

(வளரும்)

# சங்கற்பநிராகரணம்

உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி M. A. திருப்பனந்தாள்.

மாயையின் விளைவுகளால் பிணிக்கப்பட்டிருக்கும் பிரமத்தினின்றும் தோன்றிய சிறந்த அறிவு, விண்ணில் தோன்றிய காற்று அவ்விண்ணை மறைத்து நின்ற மேகங்களை நீக்கி அதனைத் தூயதாக்கியதுபோலப், பிரமத்தின் பிணிப்பையும் அது நீக்கும். அச்சிறந்த அறிவுதானும் பிரமத்திடத்தினின்றும் தானே தோன்றியது எனில், அது பிரமத்தில் முன்னமேயே இருக்க இடையில் அதற்கு (பிரமத்திற்கு) மயக்கவிளைவு வரஇயலாது. அன்றி அவ்வறிவு முதற்கண் இல்லாது இடையில் தோன்றியது எனில் முன்பு இல்லாத தொன்று பின்பு உளதாகக் காரணமில்லை. முன்பு இல்லாததொன்று பின்பு உளதாயின் விண்ணில் தோன்றியதொரு மலர் (ஆகாயப்பூ) உளது என்பதற்கு ஒக்கும்.

அற்றன்று; நெருப்பின் ஒளி விறகிடத்து முன்பு இல்லாது பின்பு பிறிதோரயைமத்துக் காண்பதுபோலப் பிரமத்திடத்தும் முன்பு காணப்படாத சிறந்த அறிவு பின்பு உண்டாம் என்னில், விறகிடத்து நெருப்பொளி தானே தோன்றுவதில்லை; தீக்கடை கோலால் கடைபவே தோன்றும். அதுபோலப் பிரமத்திடத்தினின்றும் இடையில் சிறந்த அறிவு தோன்றுமேல் அது ஒருவனால் தோற்றுவிக்கப் பட்டிருந்தல் வேண்டும். அன்றியும் அறியாமையாகிய கட்டு நிலையில் தோன்றிய சிறந்த அறிவு விறகில் தோன்றிய நெருப்பை ஒக்குமாயின் அச்சிறந்த அறிவு வெவ்வழலை ஒக்கும். அது தோன்றுதற்கு உரிய இடம் மாயைப் பிணிப்பாகிய அவித்தை விறகை ஒக்கும். அவ்வாறன்றிப் பிரமமாகாது அவ்வாறாயின் எடுத்துக் காட்டு மாறுபாடு தோன்றுவதாகும்.

வைக்கோல் வேய்ந்த வீட்டை ஓரோர் வைக்கோலாகவும் ஓரோர் கழியாகவும் பிய்த்து எறிந்து விடின் அவ்வீடு இல்லையாதல் போலவும், ஆடையை ஓரோர் இழையாகப் பிய்த்து எறியின் அவ்வாடை இல்லையாதல் போலவும் மாயையின் விளைவாகிய கட்டினையும் அதன் உண்மை உணர்ந்து ஒரொன்றாகக் கழற்றிவிடின் பிரமமே உயிராகத் தோன்றும் என்றாய். அறிவாகிய பிரமத்தின் முன் அறியாமையாகி உடல் உலகு முதலியன தோன்றி நில்லா. அறியாமையாகிய உடல் உலகு முதலியவற்றின் முன் அறிவாகிய பிரமமும் தோன்றிநில்லாது. எதுபோல எனில் மிகு ஒளியுடைய கதிரவன்முன் இருள் நில்லாதது போலவும் அவ்விருள் முன் கதிரவன் இல்லாதது போலவும் ஆம்.

இருள் அல்லாத தூய ஒளியும், ஒளிஅல்லாத தூய இருளும் ஒருங்கிருப்பதால் ஒரு காலத்தும் ஒரு பயனும் இல்லை. அதுபோலப் பிரமமும் அவித்தையும் ஒருங்கிருப்பின் அவை தமக்குள் ஒரு பயனும் இராது. இருளொடு கூடி இருளைத் துய்த்தும் ஒளியொடு கூடி ஒளியைத் துய்த்தும் அவ்விரண்டு மாகாது தனியொரு முதலாய் நிற்கும் கண்போல, அறிவாய் உள்ள இறையொடு கூடி இறை என்று அறிந்தும், அறியாமையாய் உள்ள பாசத்தொடு கூடிப் பாச மென்று அறிந்தும் அவ்விரண்டுமல்லாத உயிர் என்ற ஒரு தனிப் பொருள் உண்டென்று அறிவாயாக.

இப்பிரமம் தானே பிரமமானதாயின் அதற்கு உண்டாகிய பயன் என்னை? இப்பிரமம் தன்னிடத்தில் தன் இயல்பைக் காணுமாயின் கண்ணானது தன்னிடத்தில் தன் வடிவைக் காணும் என்பது போலாம். ஆதலின் பிரமம் தன்னிடத்தில் தன்னைக் காண்பது என்பது இல்லை. பிரமம் தன்னிடத்தில் உண்டாய இன்பத்தைத் தானே துய்க்குமெனில் பிரமம் மாயை முதலிய விளைவுகளொடு கூடுமுன் தன் இன்பைத் தான் துய்க்காது இருப்பானேன் என்ற வினா எழும். அவ்வாறு கேட்ட தற்குக் கரும்பு தன்னிடத்தில் உண்டாய சுவையைத் தான் துய்க் காமல் இருந்தாற் போல்வது அது என்று கூறினாய். இவ்வாறு கூறுவது முன்பின் முரணுகுமல்லவா? பிரமத்தில் உண்டாகிய இன்பம் உனக்கு இவ்வீடு பேற்றில் துய்க்க நேர்ந்தது. நீ தனியே உயிர் என்று ஒரு முதலாய் கட்டுண்டு இருந்து இப்பொழுது அதனின் நீங்கி இறையொடு கூடியதால் அப்பேறு கிடைத்தது என அறிவாயாக.

அது நீ ஆகின்றாய் என்னும் பெருந்தொடரின் உண்மைப் பொருளை ஆராயுமிடத்து நீ அதனுடன் ஒன்றுவாய் என்பது பொருளல்ல. ஒருவன் ஒருவனுடைய வீரத்தைக் கண்டபொழுது நீ புலியாயினை எனில் புலியின் வேறாக அவன் வேறு இல்லை என்பது கருத்தாகாது. ஒருவன் ஒருவனைப் பார்த்து நீ இப்படி இளைத்திருப்பானேன் என்று வினவ, அவன் ''நான் நோயாய்க் கிடந்தேன்'' எனக் கூறுகின்றான். அவ்வாறு கூறுவதால் அவன் தான் கொண்ட நோயின் வேறல்லன் என்பது கருத்தாகாது. இவ்வாறே நானே பிரமம் எனில் அதனொடு இரண்டறக் கலந்து அதனின் வேறாகாது நிற்கின்றேன் என்பதே அதன் கருத்தாகும். கூர்ந்து நோக்கின் அசைவு என்ற ஒன்று உடலின் இடமாகத் தோன்றுவதேயன்றி பிரமத்திற்கு அவ்வசைவு இல்லை. நீரில் நிழல்பட இருக்கும் மதியானது நீர் அசைந்த பொழுது அசைந்தாற் போல் இருக்கும்; ஆனால் உண்மையில் அம்மதிக்கு அசைவில்லை. அதுபோல்வதே இதுவாம் என்றாய். அசைவில்லாதிருப்

பான் ஒருவன் ஆற்றில் ஓடும் நீரைக்கண்டு தானும் அசைவது போன்றிருந்தது போல் இருந்தது ஒழிந்து பின் நமக்கு அந்தக் கவலை இல்லை என்று கண்டாற் போல் விண்ணிலிருக்கும் மதியமும் காணத் தக்கதாகும். அப்பொழுது நீ காட்டிய காட்டுப் பொருத்தமாகும். அவ்வாறன்றி எதிர் நிழலாய மதிக்கு அசைவில்லை: தண்ணீர்க்கே அசைவு என அம்மதியை நீக்கி வேறொருவன் கண்டு சொல்லும் சொல் உண்மையாதல் போல், பிரமத்துக்கு அசைவில்லை; உடற்கே அசைவுண்டு என வேறொருவன் கூறுவதால் அப்பிரமத்தின் வேறாய் ஒருவன் உளனுதல் பெறுதும். அவ்வாறாகப் பிரமம் ஒன்றுமே உளது என்று மூன்பு நீ கூறிய சொல் யாதாய் முடியும்?

இவ்வுடல் நீங்கியவிடத்து அவ்வுடலினின்று நீங்கிய உயிர் பிரமத்தொடு கலக்கும். அது குடத்துள் அகப்பட்ட வெளி அக்குடம் உடைந்தவிடத்து ஏனைப்பெருவெளியொடு கலந்து நிற்பது போல்வ தாம் என முன் கூறினாய். பெருவெளி குடவெளியாய் நின்ற காலத்து ஒரு துன்பத்தைத் துய்த்ததும் இல்லை; அக்குடம் உடைந்து அவ் வெளி பெருவெளியொடு கலந்த பொழுது ஒரு இன்பத்தைத் துய்த்ததும் இல்லை. அதுபோலப் பிரமமும் உடலுள் அகப்பட்டு நின்றவிடத்து ஒரு துன்பத்தைத் துய்த்ததும் இல்லையாதல் வேண்டும். அதனை விட்ட பொழுது ஒரு இன்பத்தைத் துய்த்ததும் இல்லையாதல் வேண்டும்: ஆனால் பிரமமோ உடலில் நிற்குங்கால் துன்பத்தைத் துய்த்தும் விட்டகாலத்து இன்பத்தைத் துய்த்தும் இருத்தல் கண் கூடாக உள்ளது. ஆதலின் குடவெளி உவமையாகாது;

இதுவன்றி நீ சொன்ன மெய்நூல் அளவையில் மாறின்றி ஒருவன் நான் பிரமம் எனத் தெளிந்த காலத்து அவ்வாறு ணர்ந்த அனைவரும் வீடுபேறு அடையவேண்டும். அவ்வாறின்றிப் பிரமஞானம் உடையார் வீடுபேறடைவர்; அல் லாதார் அடையார் எனக் கூறுதலின், அறிந்தவர் என்றும் அறியாதவர் என்றும் அப்பிரமத்தை விடுத்து உயிரினங்கள் இரு வகைப்படுவதாய் அமையும். பிரமத்தன்மை கூடாதவர் வேள்வி முதலிய கருமங்களைச் செய்ய அதனால் அவர்க்குச் சிறந்த அறிவு உண்டாம் எனில், பிரமத்தை மாயையின் விளைவுகள் பொருந்தவும் ஒருகாரணம் கூறவேண்டும். அதற்குக் காரணம் கூறுத பொழுது உயிர்கள் பிரம மாதற்கு மட்டும் ஒரு கருமம் செய்தல் வேண்டும் என்றல் பொருந்துவதன்றும்

மரத்தைக் கடைந்த பொழுது உண்டாகிய நெருப்பு அம் மரத்தை அழிப்பது போல, வேள்வி முதலிய கருமங்களைச் செய்வதனால் பெறும் சிறந்த அறிவால் உயிர் செய்த வினைப்பயன்கள் அழியும் என்றாய். அறங்கூறும் மறையொழுக்கம் அனைத்தையும் கைவிட்டுப் பிரமஞானம் பெறாது இருந்தும் பெற்றேம் என நீ அவற்றைக் கைவிட்டு நிற்றற்குக் காரணம் ஊழோ அன்றி அறியாமையோ? மனிதப் பிறப்புஎடுத்த பொழுது பிறவிப்பிணி முழுமையாக நீங்கப் பல்வேறு கடமைகளைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது கைவிடுதல் நன்றியில் செயலாகும். பிரமஞானம் இன்றி ஒழுக்க நெறிகளை நெகிழ்வித்து, குழந்தைகள் பித்தர் குடியர் பேயர் துயில்வோர் முதலியவர்களைப் போல நடப்பது அறியாமையாகும். அவ்வொழுக்கங்கள் தாமாகக் கழிதலின்றி நாமாகக் கழிப்பிப்பின் நிரயத்துன்பமே கிட்டும். மிகச்சிறந்த பிரமஞானம் சீரிய ஒழுக்கங்களால் உண்டாகாது இருக்குமேல், அப்பேரறிவு எஞ்ஞான்று கிட்டும்? வையினும் வாழ்த்தினும் ஒறுப்பினும் வெறுப்பினும் ஒரு தன்மைத்தாய் இருக்கும் நிலை என்று கைகூடும்?

இருக்கும் நாட்களோ சில. இதற்கிடையில் எண்ணிறந்த மெய் நூல்களைக் கற்று நல்லார் பலருடன் பயின்று அதனால் பெறும் பயனின்றி வாதிட்டு உண்டுஉடுத்து இருக்கும் நிலை எற்றுக்காம்? அவ்வாறிருப்பின் உடல்விடும் காலத்து அஞ்சற்க எனக் கூறும் தெய்வமும் இல்லையாகி விடும். அன்றியும் நீயே மால்அயன் முதலாக உள்ள எல்லாத் தெய்வங்களும் ஆக இருந்தேன் எனக் கூறின், அத் தெய்வங்கள் அவ்வாறு கூறிய நின்னை நரகத்தில் வீழ்த்தும். ஆதலின் இம் மாயாவாதம் எனும் பேயை உடயவனே! இந்நிலையிலேயே இருப்பின் உலகில் உள்ள அனைவரும் இறந்து துறக்கம்புக்கு இருப்பினும் நினக்கு நிரயம் நீங்காது என்பதாம்.

பிரமம் ஒன்றே; ஒன்றெனின் வேதம், சீவன் என்றும் பரம் என்றும் இருபொருள் பற்றிப் பேசுவது ஏன்? வேதம் தானே தோன்றியதா? அன்றி ஒருவரால் செய்யப்பட்டதா? வேதத்தில் இறைவன் தனக்குக் கீழ்உள்ள தெய்வங்களைத் தொழுது கூறியதாகவுள்ள சொற்கள் காணப்படுகின்றனவே! அதற்குக் காரணம் என்ன? இம்மூன்று வினாக்களுக்கும் உரிய விடை முதற்கண் கூறப் படுகின்றது. அடுத்துப் பிரமமே உலகமாகக் காரியப்படுகின்றது என்னும் கருத்தைப் படிப்படியாக மறுத்து உலகம் காரியப்படு மாற்றையும், பிரமம் அதனின் வேறுமாற்றையும், துன்ப இன்பமும்

வீடுபேறும் அடைவது உயிரன்றிப் பிரமம் ஆகாது என்றும் தெளிவுபடுத்தப் படுகிறது. அநவர்த்திதம் - வரம்பற்றது. சத்த ரூபம் – ஒலிவடிவு. அகண்டிதம் – துண்டிக்கப்படாதது; யாண்டும் நிறைந்தது. தந்தம் - பல்; தாலு - நாக்கு. அலகை - பேய். சுயம்பு - தானுகத் தோன்றியது. பிரமாணம் - அளவை. பிரமேயம் - அறியப் படும் பொருள். பிரமாதா - உயிராகிய அறிபொருள். பிரமிதி - உயிரறிவாகிய கருவி. சுத்தி - சிப்பி. மித்தை – பொய்த்தோற்றம். விவகாரத்தில் - பிரமம் உடல் உலகு முதலியன வாகக் காரியப் படும் நிலையில். பொற்பிதிர் - பொன்னின்துகள். பலம் – காய். பாதவம் - மரம். பலாலம் - வைக்கோல். உபாதானம் - முதற் காரணம். ஒருபடம் - ஒருபுடவை. வன்னி - நெருப்பு. நுந்துழி – சிலந்தி. சைவந்தவன் – சைவச்சார்புடையன். தற்பணம் - கண்ணுடி. சாளரம் - சன்னல். இந்தனம் - விறகு. தத்துவமசி-அது நீ ஆகிருய். அரணி - தீக்கடைகோல்.

## ஐக்கிய வாதியின் கருத்து

அரிதேர்ந்து உணராப் பெரியோன் உரைத்த
பதிபசு பாசம் விதிமுறை கிளக்கின்
ஈசன் ஏகன் எண்ணிலி பசுக்கள்
பாசம் இருவகைப் பரிசினது உலகத்து
ஆயவன் உயிர்க்கு மாயையின் அருளால்
இருவினைத் தொகையின் உருவினைத் தருமால்
கருமுகில்அடர இரிதரு கதிர்போன்று
அறிவாம் உயிரிற் பிறியாது ஏயும்
ஈட்டும் இருபயன் ஊட்டிடும் நியதிக்
கொருபொழுது இருபயன் நுகர்வுற மருவுதல்
இன்மை யாதல் முன்னிய காலைச்
சத்தி நிபாதம் உற்றுஇறை யருளால்
உருவுகொடு உலகு தெரிவுற மருவி
மாசுறு தூசு தேசுற விளக்கும்
தன்மையின் உணர்த்தும் புன்மைகள் நீங்கி

நீரும் நீரும் சேருந் தகையின்
அறிவினோ டறிவு செறிவுறப் பொருந்தி
ஒன்றும் என்பதை உலகோர்
நன்று முத்தி எனநவிற் றினரே.

(இ-ள்) மாலும் ஆராய்ந்து உணர்தற்கரியதிருவடியையுடைய சிவ பெருமான் அருளிய இறை உயிர் தளை என்னும் முப்பொருள் உண்மை யையும் உள்ளவாறு கூறுமிடத்து இறை என்று கூறப்படும் சிவ பரம்பொருள் ஒப்பற்ற முழுமுதற்பொருளாக விளங்கும். உயிர் பலவாம். தளை மாயை கன்மம் என இருவகைப்படும்.

உலகிற்கு அம்மையப்பராக விளங்கியருளும் சிவபெருமான் தனது கருணை மிகுதியினால் உயிர்க்கு வினைக்கு ஈடாய உடல்களை மாயையினின்றும் கொடுத்தருளுவன். கரிய மேகம் பொருந்த கதிரவன் ஒளி குன்றுவது போல, தூய அறிவாய உயிரிடத்து உடல் பொருந்த அதன் அறிவு குன்றும். முன்னை வினைக்கு ஈடாய இன்ப துன்பங்களை முதல்வன் உயிர்க்கு அளிப்பன்; அவ்வாறாய இன்ப துன்பங்களை ஒருபடித்தாக எண்ணி ஏற்கும் நிலை வந்துற்ற விடத்து இறைவனின் அருள்வீழ்ச்சி பொருந்தும். அந்நிலையில் முதல்வன் கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு, அழுக்குற்ற ஆடையை வெள்ளாவி கொண்டு வெண்மையாக்கிய தன்மை போல், அருள் வீழ்ச்சிக்கு இலக்காகிய உயிரிடத்து உற்ற பாசங்களைத் தீக்கையினால் நீக்கி அருளுரை வழங்குவன். அவ்வருளுரை பெற்ற உயிர் பிறப்புக்கு ஏதுவாகிய குற்றமெல்லாம் நீங்க, நீரும்நீரும் கூடி ஒன்றுபட்ட தன்மைபோல் சிவனும் அவ்வுயிரும் சேர்ந்து ஒன்றுபட்டு நிற்கும். இவ்வருள் நிலையை உயர்ந்தோர் வீடுபேறு என்பர்.

உலகத்து ஆய் அவன் — உலகத்திற்குத் தாயும் தந்தையுமாக இருப்பவன். ஆய் - தாய். உயிர் உடலொடு பொருந்தும் வழி அவ்வுடல் வயத்ததாய வினைவினைப் பொருந்தும்; நன்மை தீமை யாகிய இரண்டையும் ஒப்பமதித்து ஒருங்கு ஏற்கும் நிலையை இரு வினை ஒப்பு என்பர். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என எண்ணி ஏற்கும் நிலையே அது. சத்தி — அருள்; நிபாதம் — வீழ்ச்சி. [அருள் வீழ்ச்சி என்பது இறையருளுக்கு இலக்காதலாம்.

## ஐக்கியவாதிக்கு மறுப்பு

மூத்தி என்பதை எவனே சுத்த
அறிவெனில் பாசம் செறியா மாயை
உருஇரு வினையால் வரும் இரு வினையும்
உருவா லன்றி மருவாது இவற்றின்
முந்தியது ஏதோ வந்துஇணை வதற்குஓர்
ஏது வேண்டும் தான்இயல் பென்னின்
வீடுற் றவரினும் கூடக் கூடும்
ஈங்கிவை நிற்க நீங்காக் கருவிகள்
கொண்டறி வறியக் கண்டது மன்றி
மருவிய உருவு துயில்பெறுங் காலைச்
சிறுபொறித் தறுகட் கறையணற் சுடிகைத்
துத்திக் கடுவுள் துளையெயிற் றுரகக்
கொத்தயல் கிடப்பினும் குவைதரு நவமணி
ஒருபால் துதையினும் பெருகார் வத்திஞேடு
அச்சமும் அணுகாக் கொச்சமை என்னே
கருவி யாவும் பிரிவுறு நிலையேல்
பொறிபுல ஞதி குறைவற நிறைந்து
காட்சிய தளிக்கு மூட்சியின் முன்ஞக்
கொடுத்தோர் ஆழி விடுத்தவன் நாடிக்
கொள்வோர்க் காணுது உள்கி மீண்டுழித்
தந்தவற் கண்டாங்கு அந்தமில் அதனைத்
தருக என்னும் பெருமதி பிறங்குமது
அறிவி லாமைஎன் றனைஅது மலமாக்
குறிகோ ளாளர் அறைகுவர் அன்றே
அறிவிற் கறிவு செறியவேண் டின்றே
உண்மையில் இருமையும் ஒளியே எனில்ஒரு
தன்மை யாகமுன் சாற்றினர் சிலரே
முன்பு நன்றுடன் ஒன்றிப காலை
இன்பம் எய்துதற் கிலதுஉயிர் ஆதலின்
நீயலை பொருத மாயா வாதி
ஆயினை அமையும் அருள்நிலை கேண்மதி.

(இ - ள்) இதனை வீடுபேறு என்றல் எங்ஙனம்? அதுபற்றிப் பின்னர்க் காண்பாம். உயிர் காலப்பழமைக்கு எட்டாத காலத்தேயே தூய அறிவாய் இருக்கும் எனில், நடுவே அதனைப் பாசம் வந்து பொருந்துமாறில்லை. மாயையின் விளைவாய உடல் அறம்பாவங்கட்கு ஈடாக வந்து பொருந்துவதல்லது தானாகப் பொருந்தாது. அவ்வறம்பாவங்களும் உடலொடு இயைந்தன்றி உளவாகாது. இந்நிலையில் உயிரை மாயை முன்கூடியதா? அன்றிக் கன்மம் முன் கூடியதா? என்ற வினா எழுகிறது.

தூயதாய உயிரிடத்து இடையே பாசம் பொருந்த வேண்டுமேல் அதற்கொரு காரணம் வேண்டும். காரணமின்றி அது இயல்பாகவே பொருந்திற்று எனில் மாயை கன்மங்கள் நீங்கி வீடுபெற்றவரிடத்தும் அப்பாசம் இயல்பாகப் பொருந்த வேண்டும். அவ்வாறின்மையின் அது பொருந்துவதன்றாம். இவை நிற்க,

காலப்பழமைக்கு எட்டாத காலத்தேயே பிணிப்புண்டு இருக்கும் ஆணவமலத்தை உடல் கருவிமுதலியனவற்றின் துணைஒராற்றான் நீக்க, உன்னுடைய பொறவழிப் புலன்களை நுகர்ந்து வருவது கண்கூடாகும்; அவ்வாறிருக்கவும் மலம் என்பது ஒன்று இல்லை என்றாய்.

அன்றியும் காலப்பழமைக்கு எட்டாத காலத்தையே உயிரைப் பிணித்துநிற்கும் மலம் என்பது ஒன்று இல்லை; அது நடுவே இயல்பாய் வந்ததொன்றாம் என நீ கூறும் இவ்வுடம்பில் துயிலுங்கால் சிறிய பொறியையும் கறுத்த கழுத்தையும் படத்தையும் உள்ளே துளையாய் இருக்கும் பற்களில் நஞ்சையும் கொண்டு அஞ்சத்தக்கதாக விளங்கும் பாம்பின் கூட்டம் ஒருமருங்கில் வந்து கிடந்ததாயினும் குவியலான நவமணிகள் ஒருமருங்கில் மிகவும் பெருகிக்கிடந்த தாயினும், அம்மணிகளைக் கண்டு பெருவிருப்பு இன்றியும், பாம்பைக் கண்டு பேரச்சமின்றியும் இருக்கக் காரணம் என்னவோ? கருவிகள் யாவும் நீங்கிய நிலையிலேயே அவ்விருப்பு வெறுப்புஅற்ற நிலை ஏற்பட்டது. பொறிபுலன் நுகர்வு குறையற நேர்ந்து அறிவைக் கொடுக்க அதன்வழி உயிர் அனைத்தையும் உணர்ந்து நிற்கும் காலத்திலும், ஒருவனிடத்தில் விற்றற்கு என ஒரு மோதிரத்தைக் கொடுக்க, அதனை அவன் எடுத்துச் சென்று வாங்குநர் இன்மையின் மீளத் தந்துவிட, அதனைப் பெற்றுக்கொண்டவன் தான் பெற்றுக் கொண்டதை மறந்து மீளவும் அவனைக் கண்டு தான்

முன்தந்த மோதிரத்தைத் தருகஎனக்கேட்பதற்கு என்ன காரணம் எனில், அது அவனிடத்து ஏற்பட்ட அறியாமையாகிய மயக்கம் என்று கூறுகின்ருய். அவ்வாறு நீ கூறும் அறியாமையையே மலம் எனப் பெயர்தந்து பெரியவர்கள் கூறுவர்.

உயிர் தூய அறிவாய் இருப்பின் வேருேர் அறிவொடு சென்று கூடவேண்டுவதில்லை. வீடுபேற்றில் இறையும் உயிரும் நீரும்நீரும் கூடிஞற்போல் கூடி ஒளிமிக்கிருக்கும் என நீ கூறுகின்ருய். இறையையும் உயிரையும் நீ கூறுவது போல் ஒரேநிலையில் வைத்துக் கூறுவார் எவருமிலர். காலப்பழமைக்கு எட்டாத காலத்தேயே தூயதாய் இருக்கும் உயிரைப் பின் கூடிய பாசம் நீங்க வீடுபேற்றில் அவ்வுயிர் இறைவனெடு கூடி இன்பத்தைத் துய்க்கும் என்ருய். அங்ஙனமாயின் இடையில் இப்பாசம் கூடுமுன் உயிர் இறையொடு கூடி இன்புற்றிருக்க வேண்டும். அவ்வாறு இன்மையின் நீயும், குடவெளி பெருவெளியொடு கலந்தாற் போல் உடலில் நீங்கிய உயிரும் பிரமத்தொடு கலக்கும் என்னும் மாயாவாதியொடு ஒரு தன்மையன் ஆகிவிட்டாய். அந்நிலையை விடுத்து அருளுண்மையை நன்கு தெளிவாயாக.

ஐக்கிய வாதிகள் ஆணவமலம் என்பதொன்றில்லை என்னும் கொள்கையை உடையவர். வீடுபேற்று நிலையில் இறையும் உயிரும் ஒன்ருகி ஒருதன்மைத்தாக இலங்கும் எனும் கொள்கை உடையவர். இவ்விரு கருத்துக்களே இங்கு மறுக்கப்படுகின்றன. உயிர் உடலொடு கூடித் துயில்கின்ற பொழுது பாம்பையும் மணிக்குவையையும் வேறுபடுத்தி உணரும் அறிவைப் பெறவில்லை. விழிப்பு நிலையிலும் முன் நிகழ்ந்ததொன்றைப் பின் மறந்துவிடுகிறது. இவ்விரு நிலையிலும் இவ்வாறிருத்தற்குக் காரணம் அறியாமையைச் செய்யும் ஆணவ மலமேயாம் எனக் கூறப்படுகிறது.

பிற்பகுதியில், வீடுபேற்று நிலையில் இறையும் உயிரும் ஒன்றுபட்டு ஒருதன்மைத்தாய் இலங்கும் என யாரும் கூறுவாறின்மையானும், மாருக உயிர் சிற்றறிவும் மலமாசும் உடையதெனவும், இறை முற்றுணர்வும் இயல்பாகவே வினையின் நீங்கி விளங்கும் இயல்பும் உடையது எனவும் அறிஞர்கள் கூறுதலின் அவ்விரண்டும் ஒருதன்மைத்தாகா எனக் கூறப்படுகிறது. உரகம் - பாம்பு; கொச்சமை – அறியாமை. ஆழி - மோதிரம். நீ அலை பொருத - உன்னுடன் வழக்கிட்டுக் கொண்ட; மதி-அசைநிலை;

# திருவிளையாடற் புராணம்

உரைநடை

பன்றிகள் வாய்விட்டுக் கதறும் ஒலியும், சேவல்கள் கூவும் ஒலியும் ஆடுகளின் ஒலியும் நாய்களின் குரைப்பொலியும் வீரர்களின் ஆரவார வொலியும் ஒன்றுபட்டு நரிகளின் ஊளையொலிபோற் கேட்டன.

இரவின் எல்லையைக் காணுதற்கு நகரம் கண் விழித்தாற்போல முகில் தவழும் பெரிய வாயில்கள் திறந்த அளவில் எங்கும் போக இடமின்றி அடைபட்ட நரிகள் அனைத்தும் விரைந்து, மிக்க கரிய இருளின் துண்டங்கள் காட்டின்கண் ஒழுகுற்போலக் காட்டிற்குள் ஓடி மறைந்தன[1].

## சூரியன் தோற்றம்

கேட்டல், சிந்தித்தல், நிட்டைகூடல் முதலியவற்றால் மெய்யுணர்வு பெருதவரிடத்துச் சிவபரஞ்சோதியாகிய சூரியன் தோன்றி அருட்கிரணத்தை வீசியபோது அங்குத்தோன்றிய சிறு தெய்வங்கள் வலியிழந்து ஒளிமழுங்குதல் போலச்[2] சூரியனின் செவ்விய கிரணங்கள் பரந்து ஒளிவீச விண்மீன்களின் கூட்டமெல்லாம் வலி குன்றி ஒளி மங்கின.

> ஈறி லாச்சிவ பரஞ்சுடர் இரவிவந்(து) எறிப்பத்
> தேறு வாரிடைத் தோன்றிய சிறுதெய்வம் போல
> மாறில் ஆதவன் செங்கதிர் மலர்ந்துவாள் எறிப்ப
> வீறு போயொளி மழுங்கின மீன்கண மெல்லாம்.

---

1. குதிரை வடிவம் நீங்கிய நரிகள் நகரை விட்டு வெளியேறித் தத்திச்சென்ற இடம் 'தத்தனேறி' என்னும் ஊராம். தத்துநரி என்பது தத்தனேறி ஆயிற்று என்பர். இது செல்லூருக்கு மேற்கே உள்ளது. நரிகள் தொடர்ந்து சென்ற இடம் 'தொடர் நரி' என்பதாம். இவ்வூர் தத்தனேறிக்கு மேற்கே உள்ளது.

2. இங்கே, 'சென்று நாம் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' எனவரும் திருநாவுக்கரசர் மறுமாற்றத் திருத்தாண்டக அடி சிந்திக்கற்பாலது.

அரியவராகிய இறைவர், தம்மை நோக்கி வருந்தும் உண்மைத் தொண்டராகிய வாதவூரடிகளுக்கு எளிதாகி மண் சுமந்தருளும் வருத்தத்தை நோக்கித் திருவருளாகிய திருவடிகளை வருடும் பொருட்டு ஆயிரங்கரங்களையுங் கொண்டு சூரியதேவன் கீழைக் கடலிலே வந்துதோன்றினான். அப்போது குதிரைகளைப் பாண்டியனுக்குச் செலுத்தியதாலே கவலை தீர்ந்தது. அகத்தின்கண் மெய்யுணர்ச்சியால் சிவத்தை உணர்ந்த மாணிக்கவாசகனார் இருதயம் போலச் செந்தாமரைகள் மலர்ந்தன. ஒப்பற்ற பரம்பொருளை உணர்ந்து, சொல்லிறந்து இருந்த அம்மாணிக்கவாசகரின் மௌனம் பொருந்திய வாய்போல் இரவில் மலர்ந்திருந்த குமுத மலர்கள் கூம்பின.

### பாண்டியனின் மனக் கொதிப்பு

விடியற்காலத்திலே, குதிரைப்பந்திக் காவலர்கள், 'இதனை என்னவென்று நம் அரசனுக்குக் கூறுவோம்' என்று அச்சங் கொண்டு விரைந்து எழுந்துபோய்ப் பாண்டியன் அரசியல் மண்டபத்தை அடைந்து, அரசனை வணங்கி, உடல் நடுங்க ஒதுங்கி நின்று 'அரசே! காற்றினும் விரைந்து செல்லும் வேகமும் கண்களுக்கு இனிய அழகுமுடையனவாய் நேற்றுவந்த குதிரைகளெல்லாம் பந்தியில் நின்ற பழைய குதிரைகளுக்குக் கூற்றுவன் என்று சொல்லுமாறு நரிகளாகி, நகரம்முழுவதும் நிறைந்து பல துன்பங்கள் செய்துவிட்டுக் காட்டின்கண்ணே ஓடிப்போயின' என்றார்கள். நினைத்தற்கும் எட்டாத இச்சொல்லாகிய கொடிய காற்று, செவியாகிய துருத்தி வழியே சென்று, சினமாகிய கொடிய நெருப்பினை மூட்டி எரித்த தீப்பொறி சிதறிட அரசன் கண்கள் சிவந்து, சீறிக் கோபித்ததைக் கண்டு அமைச்சர்களும் பயந்து ஒதுங்கினர்.

முதனாட் குதிரைகளைக் கண்டு பெருமகிழ்வடைந்த அரிமர்த்தன பாண்டியன், அக்குதிரைகளே மீள நரிகளாய் ஓடிப்போயின என்பதைக் கேட்டு, அமுதுண்டவன் மீள நஞ்சுண்டாற்போலத் துயர்க்கடலுள் அழுந்தித் தன்னருகிலிருக்கும் பழைய மந்திரிமார்களை நோக்கி, 'மதிநூல்வல்லீர்காள்! வாதவூரன் என்னும் கரிய இருட்டுள்ளம் படைத்த கள்வன் நம்முடைய பொருள்முழுவதும் கவர்ந்துகொண்டு, இடுகாட்டிலே இரத்தமும் குடரும் நிணமும் தின்று திரிகின்ற நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி நமக்கு வரவிடுத்தான்; இவன் செய்த மாயத்தைக் கண்டீர்களா! இம் மாயஞ்செய்தவாதவூரனை நாம் என் செய்வது?' என்று வினவினான். அதற்கு அவர்கள், 'இவ்

உலகத்திலே நம்போன்றவர்க்கெல்லாம் கொடிய பழி பாவம்உண் டாகக் குற்றஞ் செய்து, செய்நன்றி மறந்த தீயோனாகிய வாதவூரன் பொருட்டு இனி யாம் ஏது சொல்லக்கடவேம்' என்று தலை கவிழ்ந்து பதில் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்தார்கள்.

வாதவூரடிகளும் பாண்டியனும்

அப்பொழுது ஞானமயமாகிய பேரின்பக்கடலுள் மூழ்கிய வாதவூரடிகள், ''அரசனுக்கு அவன் மனத்திற்கு இனிய குதிரை களைக் கொடுத்து அவன்கருமத்தை நன்றாக முடித்து மனக்கவலையை விடுத்தேம்'' என்று கருதி மனக்களிப்பு மிக அங்கு நிகழ்ந்த செயல் ஒன்றையும் அறியாமல் அரசனிடத்தே வந்தார். அரசன், வந்த வாதவூரடிகளை வெகுண்டு நோக்கி, ''அளவிறந்த பொருளைக் கொண்டு போய் நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து அழகாகக் கொடுத் தாயல்லவா? அதனால் அரசகருமம் முடித்துப் புகழை நிலை நிறுத்தவல்ல தக்கோர் உன்னைப்போல் எவ்வுலகத்தில் உள்ளாரோ?'' என்றான். அதனைக்கேட்ட மாணிக்கவாசகர் திடுக்கிட்டு, ''அக்குதிரை களுக்கு என்ன குற்றம்'' என்று வினவினார். பாண்டியன், ''குற்ற மொன்றுமில்லை; நள்ளிருளிலே நரிகளாய்ப் பக்கத்தில் நின்ற குதிரைகளையெல்லாம் கொன்று இரத்தமொழுக ஊன் சிதற அவற்றின் குடர்களைப் பிடுங்கித்தின்று விட்டு எதிரில் வந்த மக்க ளுக்கும் இடர்விளைத்து நகரைக் கலக்கிக் காட்டுக்கோடின! இவ்வளவு காலமும் நீ எனக்குக் கண்ணும் கவசமும்போல ஒழுகியது சமயம்பார்த்து நம்முடைய பொருளைக் கவருதற்கோ! உனது அமைச்சியல் நன்று நன்று! புண்ணிய மறையோர் மரபில் தோன்றினேமென்று ஒரு பெருமை கொண்டனையே! நீ செய்த காரியங்களைப் பிறர் செய்வராயின் உடனே தண்டிக்கப்படுவர்'' என்று கூறித் தண்டற்காரர்களை நோக்கி, ''தண்டலாளர்களே! இவனைக்கொண்டுபோய் எங்குஞ் செல்லவொட்டாமல் தடுத்தும், இழுத்தும் நமது பொருள் முழுதையும் வாங்குமின்! உங்கள் ஆணையைக் கடந்தால் வலிசெய்தும் வாங்குமின்!'' என்று சினந்து சொல்லியனுப்பினான்.

தண்டலாளர்கள் வாதவூரரை வருத்துதல்

உடனே காலனையும் எதிர்க்கும் மிக்க வலிமையுடைய தண்டலாளர்கள், சூரியனை இருள் நெருங்கிப் பிடித்துக் கொண்டு

வந்தாற்போல அறவடிவாகிய வாதவூரடிகளைப் பற்றிக் கொண்டு வெளியே வந்தனர்; கடிய உச்சிப்பொழுதிலே சூரியனைப் பார்க்கும்படி அசையாமல் நிற்கச் செய்து இரண்டு கைகளிலும் நெற்றியிலும் கல்லேற்றித் துன்புறுத்தினர்.

### வாதவூரடிகள் இறைவனை நினைந்து அழுதல்

அப்பொழுது வாதவூரர் அதனைப் பொறுக்கலாற்ருது கீழே வீழ்ந்து சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடராகிய கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளை அழைத்து அழுது துதிப்பாராயினர்:

நாதவோ! நாத முடி(வு) இறந்த நாடகஞ்செய்
பாதவோ! பாதகனு மென்னைப் பணிகொண்ட
வேதவோ! வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ! போத நெறிகடந்த பூரணவோ!

ஐயவோ! என்னுடைய அன்பவோ! அன்பர்க்கு
மெய்யவோ! மெய்யில் வினையேன் தலைவைத்த
கையவோ! செய்யகழற் காலவோ! காலனைக்காய்
செய்யவோ! வேதப் பரியேறுஞ் சேவகவோ!

அத்தவோ! கல்லாக் கடையேனை ஆட்கொண்ட
பித்தவோ! பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ! சிந்தந் தெளிவித்(து) எனைத்தந்த
மூத்தவோ! மோன மயமான மூர்த்தியவோ!

என்று முறையிடுந் துதி சோமசுந்தரக் கடவுளின் திருச்செவியிலே சென்று புகுந்தது. உடனே விடையேறும் வித்தகராகிய கடம்பவன சுந்தரர், வாதவூரடிகளின் செய்கைகளை யெல்லாம் அரிமர்த்தன பாண்டியன் தெளியவும், தமது திருமுடியிலே வையையாற்றின் மண் ஏறவும், வந்தி என்கின்ற முதியாள் தான் ஏறிய விமானத்துடன் சிவபுரத்தை அடையவும் திருவுளங் கொண்டருளினர்.

### வையையாற்றின் பெருக்கு

பின்பு பேரருள் குன்ருத சிவபெருமான், வையை நதியினை நோக்கி, ''நீ ஊழிக்காலத்தில் பெருகா நின்ற கடல்போல, இவ்

உலக மக்கள் அனைவரும் வியப்பினை அடையுமாறு பெருகிவரக் கடவாய்'' என்று அருளிச் செய்தார். இறைவனின் திருவாய்மொழியினைக் கேட்டவுடனே வையைநதி முன்னாளிலே காஞ்சியில் காமாட்சியம்மையாரின் தவத்தைக் குலைக்கும் பொருட்டு வந்த பெரிய கம்பை நதிபோலக் கடும் பெருக்கெடுத்து விரைவுடன் வாரா நின்றது.

அப்போது வையைநதி, வரிசை வரிசையாகக் குளிர்ந்த பாக்கு மரத்தின் பழக்குலைகள் விழக் கரைகளை உடைத்துக் குத்திக் கொண்டு ஓடிப் பழங்கள் சிதறுமாறு மரக்கிளைகளைக் கீழே வீழ்த்திக் கரும்புகளையும், வாழைமரங்களையும், விளைந்த நெற்கதிர்களையும் அரித்துத் தாண்டிக்கொண்டு பல மரங்களை வேருடன் பெயர்த்து விரைந்து சென்றது.

வையை நதி, பல்லாயிரக் கணக்கான செந்தாமரை மலர்களைப் பரப்பிக்கொண்டு வருதலால், ஆயிரங் கண்களையுடைய இந்திரனை ஒத்தது; தாமரை மலரையும் குவளை மலரையும் முல்லை மலரையும் கரும்பினையும் கொண்டு வருதலால், அளவிறந்த விற்களைக்கொண்டு போர்புரியும் வீரனாகிய மன்மதனைப் போன்றது; மற்றும் மணிகளின் வரிசை (மாலை)யையும் மலர்களின் வரிசை (மாலை) யையும் உடைந்த கரையிலே (ஒடியும் இடையிலே) சிதறிக் காஞ்சி மரங்களையும் (காஞ்சி என்னும் அணியையும்) சங்குகளையும் (வலையல்களையும்) ஒலிக்கும்படி பக்கங்களில் வீசி, அளவிடமுடியாத அழகைத் தன்னிடத்தே கொண்ட முகமாகிய தாமரை மலர்களைக் கள்ளாகிய நீருடன் (கண்ணீருடன்) கவிழ்த்து வருதலினால் ஆறாத சினத்துடன் ஊடிவரும் மகளிரை ஒத்தது.

மணிமாலையும் மலர்மாலையும் சிதறுஇறு மருங்கே
அணிகாஞ்சியும் ஒளிர்சங்கமும் அலறப்புடை எறியாக்
கணியாஎழில் முகதாமரை கண்ணீரொடுங் கவிழாத்
தணியாமுனி வுடன்ஊடிய தடங்கண்ணியர் போலும்.

குறிஞ்சி நிலத்திலுள்ள தேனையும், முல்லை நிலத்திலுள்ள நெய் பால் தயிர்களையும், மருத நிலத்திலுள்ள கருப்பஞ் சாற்றையும், (நெய்தனிலத்து) உவர் நீரையும் கொண்டு பேரொலி செய்து கொண்டு வரும் தூய நீரினையுடைய வையைநதி, சோமசுந்தரக் கடவுளால் அழைக்கப்பட்டு இந்த நல்ல நகரில் உள்ள எழு கடல்களும் தத்தமக்கு உரிய இடங்களுக்கு எழுந்து செல்வதை ஒத்தது.

கல்லென்று ஒலிக்கும் ஒலியுடன் வரும் வையை நதியின் வெள்ளம், மதுராபுரியின் பெரிய மதிற்புறத்தே சென்று பல வீடுகளையும், சிறு குடில்களையும் கீழ்மேலாகத் தள்ளி அவற்றைக் கடலின்கண் ஓடும் மரக்கலங்களையும், படகுகளையும் போலச் சுமந்து சென்று மதிலையும் தள்ளி உள்ளே புகுந்து, கடைவீதிகளையும், பிற தெருக்களையும், மன்றுகளையும், யானைக் கூட்டங்கள் இருக்கும் தெருக்களையும், சூழ்ந்துகொண்டது.

### நகர மக்களின் கலக்கமும் பல பேச்சும்

அதனைக் கண்ட நகர மக்கள் அனைவரும் நடுநடுங்கினர்; சிலர் குழந்தைகளை எடுத்தனர்; சிலர், குழந்தைகளைக் காணாமல் அலமந்து அழுதனர்; சிலர், தம் மனைக்கிழத்தியரைக் கைப்பற்றிக் கொண்டு உயிர் தப்பிச் சென்றனர்; சிலர், ''எங்கே போவோம்'' என்று கருதித் திகைத்தனர்; சிலர், ஒன்றும் தோன்றாமல் தடுமாறினர்; சிலர், தமக்குரிய பொன்னையும், பொருளையும், அணிகளையும் எடுத்துக்காப்பாற்றினர்; சிலர், பொருள்களைக் கைப்பற்றுதற்கு மறந்தனர்; சிலர், உயர்ந்த மாளிகைகளில் ஏறினர்; சிலர், "இந்நகர் துன்பக்கடலுள் மூழ்குதற்குக் காரணம் என்ன" என்று வினவினர்; சிலர், நேற்றுக் குதிரைகளெல்லாம் நரிகளாகி நகரமெங்கும் ஊறு செய்தன'' என்றனர்; சிலர், ஒரு காலத்திலும் இந்த ஆறு இவ்வாறு பெருகியதில்லை'' என்றனர்; சிலர், ''கடலரசன் முன்போலச் சீறி வரும் செயலோ'' என்று ஐயுற்றனர்; சிலர், நம் மன்னன் நீதி முறை தவறினனோ'' என்று கூறினர். சிலர், ''இது சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலோ'' என்றனர்; சிலர், ''இவ் வெள்ளத்தை வற்றச் செய்பவர் இவ்வுலகத்தில் யாவருளர்'' என்றனர்; அது கேட்ட சிலர், ''ஆலமுண்டருளிய சோமசுந்தரக் கடவுள் அல்லாது வேறியாவர் இதனை வற்றச் செய்ய வல்லவர்'' என்று பதிலளித்தனர் சிலர், ''ஆயிரங்குண்டோதரர் வந்து இந்நீரை வாய்மடுத்தாலும் இஃது அடங்காது'' என்று கருதினர்; சிலர், ''சிவபெருமான் கங்கையை எடுத்துத் தமது சடையில் வைத்தது போல இதனையும் சடையில் வைத்தால் அல்லாமல் இவ்வெள்ளம் அடங்காது'' என்று கூறினர்.

### வாதவூரர் திருக்கோயிலை அடைந்து இறைவனைத் தரிசித்தல்

இவ்வாறு நகர மக்கள் எல்லாரும் வருந்தும்போது, ஆகாய கங்கை ஆயிரமுகத்தால் வருவதுபோல இடையறாது பெருகும் வெள்ளம் குறையாத தன்மையை, அன்பே தானாகி நின்ற வாத வூரடிகளைத் துன்புறுத்தும் தண்டலாளர்களும் கண்டு தம் வீட்டின்கண்

உள்ள பொருளை வெள்ளத்தினின்றும் பாதுகாக்கக் கருதிச் சென்றனர். தண்டலாளர்கள் விட்டுச் சென்றவுடன் வாதவூரடிகள் ஆலயத்துட் சென்று மதுரைநாயக நாயகனுகிய, சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து அன்பால் அழுது இசைத்தமிழால் திருவடியைத் துதித்து வணங்கிக் கொண்டு ஐம்புலவுணர்ச்சியில் ஊற்றெடுக்கும் இன்பக் கடலுள் மூழ்கிச் சித்திரம்போல அசைவற்று இருந்தார்.

செய்யுள்—66
ஆகச் செய்யுள்—2991

## 61. மண் சுமந்த படலம்

### குடிகளுக்கு வையைக் கரையினை அடைக்கப் பறை அறைதல்

கரிய கடலின் அலைகளிடையே கிடந்து சுழலும் மரக்கலம் போல வையை நதியின் பெருவெள்ளப் பரப்பினுள் மதுரை மா நகரம் அகப்பட்டு வருந்துதலை அரிமர்த்தன பாண்டியன் அறிந்து தன் அமைச்சர்களை அழைத்து, ''நீங்கள் வையை நதிகரையினைக் கட்டிப் பெருகிவரும் வெள்ளத்தின் வேகத்தைத் தணித்து வாருங்கள்'' என்று பணித்தான். உடனே மந்திரிமார்கள், 'நன்று' எனத் தொழுது சென்று, வெவ்வேறு வகைப்பட்ட பல குடிகளையும் குறிப்பிட்டுப் பெயர்களை எழுதி எல்லையிட்டு அளந்து கோடுகிழித்துவிட்டு நகர் முழுவதும், ''அவரவர் பங்கை அடைமின்'' என்று பறையறைவித்து அழைத்தனர்; அப்போது அவ்வக் குடிகள் விட்ட கூலியாட்களையெல்லாம் ஓரிடத்தில் கூடும்படி செய்து, ''அவரவர்க்கு அளந்து எல்லை குறிப்பிட்டபடி கரை அடைக்கும் வேலையைச் செய்யுங்கள்'' என்று கூறி, அவ்வவ்விடத்திற்கு அவரவரைச் செல்ல விடுத்தனர்.

அப்பொழுது மண் வெட்டுங் கருவியாளர்களும், கூடைக்காரர்களும், மரங்களைச் சுமந்து வருகின்றவர்களும், பசுந்தழைகளையும் வைக்கோல்களையும் எடுத்து வருகின்றவர்களும், நீரினை மொண்டு பருகுவதற்கு வரும் மேகக் கூட்டம்போல வையையாற்றின் கரையிலே வந்து மொய்த்தார்கள்.

கூலியாட்கள் வையைக் கரையினை அடைத்தல்

சிலர், கரை உடைந்த இடங்களில் சென்று குதிரைப் பாய்ச்சலாக மரங்களை நிறுத்துவார்கள்; சிலர், வைக்கோல் முதலியவற்றைப் பாம்புபோல உருட்டி அக்குதிரை மரத்தின் அடியிற் கிடத்துவார்கள்; சிலர், அங்குத் தழைகளையிட்டு நிரப்புவார்கள்; சிலர், மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரஞ் செய்து பறையடிப்பார்கள்; சிலர், மண்ணை வெட்டியெடுத்துச் செல்பவரை விரைந்து செல்ல அதட்டுவார்கள்; சிலர், விரைந்து துடுமென்றுமண்ணைக் கொட்டிக் கரையின்கண் பரப்புவார்கள்; சிலர், மகிழ்ச்சி மிக்குக் குரவைப் பாடலைப் பாடுவார்கள்; சிலர், தாம் கட்டிய அணையை உடைப்பதற்கு நீர் வருதலைக் கண்டு மனங்கலங்கி, வையை நதியை நோக்கி, "அன்னையே! எங்கள்மேல் அளவற்ற சீற்றம் ஏன்? இனி, ஆறக் கடவை" என்று வேண்டி எதிர்வணங்கி மண்ணைக் கொட்டுவார்கள். பிறகு உடைப்பு அடங்க அதனைக் கண்டு மகிழ்ந்து குரவைக் கூத்து ஆடுவார்கள்; எட்டுத் திக்குகளுக்கும் எட்டுமாறுவாயினால் ஒலிசெய்து பறையடிப்பார்கள். இவ்வாறு நகரிலுள்ள அனைவருக்கும் கூலியாட்கள் வந்து சேர்ந்து அவரவர்க்கு அளந்துவிட்ட முறைப்படி தொழிலை மேற்கொண்டு செய்வாராயினர்.

வந்தி என்பவளின் தன்மை

அப்போது இம்மதுரை மாநகரின் தென்கீழ்த் திசையில் [1]ஆயிரம் பிறைகண்டு தொழுதவளும், கூனிய உடலையுடையவளும், வயதுசென்ற நரை மூதாட்டியுமாகிய [2]வந்தி என்னும் பெயருடைய ஒருத்தி இருந்தாள். அவள், செவியுணவாகிய மறைப்பொருளினை உணர்ந்து செந்தீயிலே அவியுணவையூட்டும் சிவனடியார்களினும் தவத்தால் நிறைந்த பயனை நுகருபவள்; தாயிலார்க்கு அன்னை போன்றவள்; சுவைதரும் பிட்டு விற்று உண்ணும் தொழிலினள்; யாருமற்ற தனியள். நாடோறும் தான் அவித்த பிட்டினை திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை அகத்தால் நோக்கி அன்பினால் முதலில் ஊட்டிப் பின்பு விற்பவள்.

---

1. ஆயிரம் பிறை கண்டு தொழுதவள் என்பது வந்தியின் வயதான நிலையைக் குறிப்பது; இவள் நூறு வயது உடையவள் என்பர்.

2. இந்த வந்தி என்னும் மூதாட்டியார் 'பிட்டு வாணியச்சி' எனவும் பெயர் பெறுவர்.